473

ஸர்வஜித் ஹு
வைகாசி மீ

ஸம்புடம் - 6
ஸஞ்சிகை - 5

ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

[ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகை]

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
27 MAY 1947
MADRAS

ஸம்பாதகர்: வங்கீபுரம் ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்

: ப்ரசுரிக்குமிடம் :

நெ. 5, ராமஸ்வாமி தெரு, த்யாகராயநகர்,

சென்னை.

JL
1947.6.5
184233

May 1947
Vol. 6 No. 5

ஸ்ரீ:

விஷய ஸூசிகை

		பக்கம்.
1	ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்	100
2	பகவதவதாரத்தின் முக்ய ப்ரயோஜநம்	106
3	பஞ்சாங்க ஸங்க்ரஹம்	111
4	செய்திகள்	112
5	ஸம்பாதகரின் குறிப்புக்கள்	113
6	காமாஸிகாஷ்டகம்	

வ்யாஸம் எழுதுபவர்களுக்கு விஜ்ஞாபநம்.

1. எழுதி யனுப்பப்படும் வியாஸங்கள், மூன்று அல்லது நாலு பக்கங்களுக்கு அதிகப்படாமல் சுருக்கமாகவும் தெளிவாகவும் இருத்தல் வேண்டும்.

2. ப்ரசுரப்படுத்தப்படாமல் இருக்கும் வ்யாஸங்க ளெல்லாம், தபால் சார்ஜூக்கு வேண்டிய ஸ்டாம்பு அனுப்பப்படும் பக்ஷத்தில், அவை உடனே திருப்பி அனுப்பப்படும்.

3. அநேக வித்வான்கள் மஹத்தான க்ருபையுடன் வ்யாஸங்களை அனுப்பி, அவைகளை உடனே பத்ரிகையில் ப்ரசுரம் செய்யவேண்டுமென்று நியமிக்கிறார்கள். பத்ரிகையில் இடம் ஸங்குசிதமாக இருக்கியபடியால், அவர்களுடைய நியமநத்தை அவர்கள் இஷ்டப்ரகாரம் நிறைவேற்ற ஸாத்யப்படாமல் இருக்கிறது. அவகாசம் ப்ராப்தமாகும்பொழுது அவைகள் யதார்ஹம் ப்ரசுரம் செய்யப்படும். அப்படிச் செய்வதால் ஸம்பவிக்கும் கால விளம்பத்தை அந்த வித்வான்கள் க்ருபையுடன் க்ஷமிக்க வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம்.

ஸம்பாதகர்

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸம்புடம் 6	ஸர்வஜித் ௵ வைகாசி ௴	ஸஞ்சிகை 5

"அஹோபிலே காருடசைலமத்யே
க்ருபாவசாத் கல்பித ஸந்நிதாநம் ।
லக்ஷ்ம்யா ஸமாலிங்கித வாமபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் சரணம் ப்ரபத்யே ॥"

—:o:—

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஸ்ரீமந்ந்ருஸிம்ஹகாருண்யநிர்மிதா ।
ஸ்ரீந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதாசந்த்ரதாரகம் ॥
ந்ருஸிம்ஹபக்தாநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் ।
ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியாஹ்யேஷா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ॥

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸ்ங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக்கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹாலக்ஷ்மியுடன் நித்யமாய் வஸிக்கக்கடவது.]

—::o::—

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
MAY 1947
MADRAS

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஶ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்

[6-ம் அங்கம்]

[சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி]

[ஸ்ரீ. உப. A V. கோபாலாசார்ய ஸ்வாமி, M.A., B.L.,

அட்வோகேட், திருச்சி.]

தர்க்கன் :—ஸ்வாமீ! இந்தப் பாண்ட்ய தேஶத்தைக் கண் குளிரப் பார்க்கவேணும். தர்ஶந மாத்ரத்தால் ப்ரஹ்மஹத்யாதி பாதகங்களைப் போக்க வல்ல நளஸேதுவிற்கு யாத்ரை செல்லும் முநி ஜநங்களுடைய ஆநந்த கோலாஹல ஆரவாரங்களால் இங்கே பக்தி லக்ஷ்மி தாண்டவ மாடுகிருள்.

“ ஸாரஸ்ஸாரஸ்வதாநாம் ஶடரிபுபணிதிஶ் ஶ்ராந்திஸச்சாநுவீசா
சாயாசாயாதிநீரேஹஸ்வ குணவிததிஶ்ரீவஸந்தாபஹந்த்ரீ ।
பாரம்பாரம்பரீதா பவஜலதிபவந்மஜ்ஜநாநாம் ஜநாநாம்
ஶ்ரோத்ரஸ்ரோதஸ்ஸமேந: ஶ்ருதிநியதரஸா ஸந்நியாநாம் நியாந்த்ரீ ॥ ”

த்ரமிடோபநிஷத் தாத்பர்ய ரத்நாவளியில், இது, திருவாய்மொழி யென்னும் லக்ஷ்மீ நிவாஸ ஸாரஸ்வத ஸாரத்தைப் பற்றிய ரத்நாவளீ மங்கள ச்லோகம். ஆழ்வாருடைய ஸாக்ஷாத் சிஷ்யராகும்படி, ஆழ்வார் விஷயமான ஸமாதி யோகத்தில் பாக்யம் பெற்றுத் திவ்ய ப்ரபந்தங்களை உலகத்துக்கு மீட்டுக் கொடுத்த நாதன், ‘ நமாம்யஹம் த்ராவிடவேதஸாகரம் ’ என்று ஸ்ரீ சடகோப வாங் மயமான திருவாய்மொழிக்குத் தனியன் செய்தருளினர். அந்த ரீதியை அநுஸரித்து ‘ ஶடரிபுபணிதி: ’ என்று சடகோபன் திருவாய் மலர்ந்தருளிய திருவாய்மொழிக்கே இங்கே ஸ்வாமி மங்களத் தனியன் பாடுகிறுர்.

‘ ஸேவேத ஸாரதமம் ஶாஸ்த்ரம் ’ என்றபடி, ஆத்மாவுக்கு ஹித தமமும் ஸார தமமுமான சாஸ்த்ரத்தை நிரந்தரமும் ப்ரீதியோடு பஜநம் செய்யவேண்டும். அந்த ஸாரதமமான சாஸ்த்ரம் இவர் திருவாய்மொழியே. ‘ ஸாரதமம் ’ என்று பாடாமல், ‘ ஸார: ’ என்று மட்டும் பாடலாமோ வெனில்: ‘ ஸாரஸ்வதங்களுக்குள் ஸாரம் ’ என்று நிர்த்தாரணம் செய்து பொறுக்கி யெடுத்து, ஸர்வோத்தமமாக நிஷ்கர்ஷம் செய்வதால், ‘ஸார:’ என்பதற்கு ‘ ஸாரதமம் ’ என்ற பொருள் ஸித்திக்கும். இந்த ரஸம் ரஸிக்கத்தக்கது.

“ யத் ஸாரபூதம் ததுபாஸிதவ்யம்
ஹம்ஸோ யதா க்ஷீரமிவாம்புமத்யாத் ”

என்ற வசநத்திலுள்ள 'ஸாரம்' என்கிற பதத்தை மட்டும் தொடக்கத்தில் வைப்பதால், அந்த வசநத்தை ஸூசித்து, ஹம்ஸர்களான யதிகளும் முமுக்ஷுக்களும் ரமிக்கும் ஸரஸ்வதீ தீர்த்தம் என்பதை ஸூசிக்கிறார். 'யத்ர ஹம்ஸா நிரமந்த்யுசிஜா' என்று ஸ்ரீ பாகவதத் தொடக்கத்தில் பாடியதையும் ஸூசிக்கிறார். பகவத் விஷயம் பாகவதமே. அது ஹம்ஸர்களான நாத யாமுந ராமாநுஜாதிகள் ரமிக்கும் ஸாரம்; கவி ச்ரேஷ்டரான யாமுந கூரேச பராசர பட்டர்கள் யாவதாயுஷம் இன்புற்று ப்ரவசநம் செய்த ஸாரஸ்வதம்; ஸர்வஜ்ஞ விஷ்ணு ஸ்துதி ஸம்பந்நமான சாச்வத ரஸம். 'தாத்ரு வர்ணீய நீயத்ர' என்று மஹர்ஷிகள் புகழ்ந்த த்ரமிட ரிஷிகளின் ப்ரபந்த ஸாரம். இந்த ச்லோகத்துக்கு முன் 'ஸத்ர' என்று ஒரு சிறு பதத்தை வைத்ததும், 'யத்ர தாத்ரு வர்ணீய நீ' என்று மஹர்ஷிகள் பரோக்ஷமாக ச்லாகித்ததும் 'ஸத்ர' [இங்கே] ப்ரத்யக்ஷமாக அநுபவிக்கப்படுகிற தென்று விளக்க. 'ஸத்ரஸாரஸ்வதா நாம் ஸாரஃ' அணிகுருகை நகர் முருகர் நாவிலிருந்து ப்ரவஹித்த ஸாரம்.

சங்கத் தமிழ், முச்சங்கம், சங்கப் புலவர் என்று பாண்ட்ய நாட்டின் கவி வளத்தைத் தமிழர் போற்றிப் பேசுவர். ஆதி காவ்யமான ராமாயணம் போன்றது திருவாய்மொழி. த்ரமிட பாஷையில் கவி ப்ரதம பத்ததியான ஆதி ஸரஸ்வதீ. ஸுந்தர காண்டம் போன்ற அழகர் பாடிய ஸுந்தர வேத ஸரஸ்வதீ; ஸரஸ்வதீ நதியைப் போல் அந்தர்வாஹிநியாய், உள்ளேயுள்ள அர்த்த ரத்நங்களால் நிரம்பியுள்ளது; கவிச் சக்ரவர்த்தியாகிய கம்பர் அந்தாதி பாடிப் புகழ்ந்த ஸாரம். 'சடரிபு பணிதிஃ' 'சடகோப வாங்மயம்' என்று நாத முனிகள் அருளிய தனியனை அநுஸரிக்கிறார். 'சடம்' என்னும் வாயு அசேதநம்; அது மோஹத்தையும் விஸ்மரணத்தையும் தருவது; அந்தத் துஷ்ட சக்தியின் மீது கோபம் இருப்பது சாந்தி குணத்துக்கு அநுகூலமே.

"சாந்தோ தாந்த ஸ்திதிக்ஷுஃ ஸதா ஹிதோ ஹந்தா க்ருதக்நேஷ்வாத்மநாம் வசேஷ்வக"

என்கிற லக்ஷணம் பொருந்திய இவருடைய ஓவாத ப்ரஹ்ம நிஷ்டைக்கு இக்கோபத்தில் யாதொரு விரோதமு மில்லை. 'சட' என்பது 'சடத்வம்' என்பதைக் குறிக்கும். குஹகம், கபடம், கைதவம், ஜிஹ்மம், வஞ்சனை, மாயை, இவைக ளெல்லாம் சடத்வம். இவைகளை யெல்லாம் வேரறுக்கும் சத்ரு இவர். இந்தக் கோபமும் சத்ருத்வமும் இவர் திருவாக்கி லிருந்து வந்த மொழிக்குத் தான் என்பதை 'சடகோபவாக்' என்று முநிநாதரும், 'சடரிபு பணிதிஃ' என்று ஸ்வாமியும் பணித்தனர். காவ்ய வாக்கில் கோபத்தையும் சத்ருவத்தையும் விசேஷண மாக்கி அந்வயிக்கும் ரஸம் அநுபவிக்கத் தக்கது. இது 'ஸாயாம்ஸ்யந்தீ' என்று இரண்டாம் அடியில் விளக்கப்படுகிறது. 'சாந்தி ஸந்தாந ஸீமா'—இந்த ஸாரஸ்வத ஸார காவ்யத்தில் எந்த ரஸம் ப்ரதாந ரஸம்? 'அநவமும் நவமுமான சாந்தி ரஸமே' என்பதை அழகாக வ்யஞ்ஜநம் செய்கிறார். 'ஸூக்திஷ்வாவர்ணநீய ஸ்திவாம்ஸ நாநாம்' என்று த்வந்யா லோகத்தில், 'யுவதியின் அங்கங்களில் மொத்த சோபையாக லாவண்யம் பளபள வென்று மின்னிக்கொண்டு அலைப்பதுபோல், உத்தம காவ்ய ரஸம் மொத்தமாக அலை

வீசிக்கொண்டிருக்கும்' எனக் கூறினார். ஶாந்தி குணமுள்ள கவிகள் கீர்த்தி தநம் முதலிய ஆசைகளால் வெளியே சென்று, ராஜ ஸபை வித்வத் ஸபை முதலியவைகளில் தங்கள் காவ்யங்களை ப்ரகடநம் செய்யவர். இந்த ஸாரஸ்வத ஸாரத்தைப் ப்ரகடநம் செய்ய 'வாமெ்ருநதிஷோஸக்' என்ற வேதாந்த விஜ்ஞாநஸூ நிச்சிதார்த்தர் நிலையிலிருந்த ஆழ்வாராவது அவரது ப்ரியமான அடியாராவது ஸதஸ்ஸூகளைத் தேடவில்லை. பகவத் பாகவத கோஷ்டிகளில் இதைப் பாடுவர்; ராஜ ஸபை முதலிய லௌகிக கோஷ்டிகளில் பாடார்.

இந்த ப்ரபந்தத்தில் ஶாந்தி தேவி அந்தப்புரத்தில் இருப்பதுபோல் நீங்காமல் வஸித்து விஹரிக்கிறாள். இதில் வேறு ரஸங்களான காமன் கோபன் விகட ஹாஸன் முதலியவர் ஸஞ்சரிப்பதில்லை யாதலால், ஶாந்திதேவி இங்கே ஸ்வச்சந்தமாய் ஸஞ்சரிக்கிறாள். ஶாந்தி ரஸம் குடிகொண்ட காவ்யம் இது. மற்ற ரஸங்கள் ஶாந்திக்குப் பரிஜநமாகச் சிறு குழந்தைகளாக மட்டும் இருக்கலாம். 'ஶாந்தோரஸ: ஸ்வாதிஉ௫தஃ உவெஷயநூ:' என்று ஸங்கல்ப ஸூர்யோதயத்தின் முடிவில் பத்தாவது அங்கத்தில் ஸ்வாமியே பாடுகிறார். பகவத் விஷயமான ச்ருங்காரம் சாந்தியைப் பெருக்கும். அதில் ஆத்மாவுக்கு ஆத்மாவுடன் ஸம்ச்லேஷாதி ரஸமே; ப்ராக்ருத தேஹ ஸம்பந்தத்தைப் பற்றியதல்ல. பகவத் விஷயமான காமவேகமே பக்தி. பரமாத்ம காமரஸம் இதில் நிரம்பியுள்ளதால், சாந்தி ரஸ பூர்ணத்துக்கு விரோதமில்லை யென்பதற்காக ஶாந்தி தேவி இங்கே நிச்சங்கமாய் விஹரிக்கிறா ளென்று வர்ணிக்கிறார். ஶாந்தி என்பது சுத்த ஸத்வ குணம்; ரஜஸ்ஸூம் தமஸ்ஸூம் கலக்கவே கூடாது. ஸத்வ குணத்துக்கு மத்ய மூர்த்தியான பகவானே ஆலம்பநம். இது எல்லாரும் ஒப்புக்கொள்ளும் விஷயம். இந்த ஶாந்தி ரஸத்துக்கு ஆலம்பநம் ஸர்வாத்மாவான புருஷோத்தமன். 'உயஃஉயஹணிதீநாம் ஊமஃஃஉஶீஃஉஹஷிஃ:' என்ற ச்லோகத்தையும் 'ஹணிதி:' என்பதால் ஸூசித்து; இந்த ஸார காவ்யத்தைப் பெண்ணாகவே வர்ணிக்கிறார். சாந்தியே வடிவெடுத்தது போல் இருந்தாலும், மாயை என்னும் பேய்ச்சியின் விஷ ஸ்தர்யத்தையும் அவள் உயிரையும் அடியோடு உறிஞ்சிவிட, ஆச்சர்யமான மாயா சக்தியை யுடையவள் இந்த ஸரஸ்வதீ. 'ஊயாஞ்ஸூ வூகூதிம் விஃயாக்' என்பது ச்ருதி. மாயை என்பது ப்ரக்ருதிக்குப் பெயர். 'ஹமாதஃ ஷாவெதிஶோயாநகஸீஊயா.' பகவான் என்னும் ப்ரத்யக்கான உட்பொருளை மறைப்பது மாயை என்னும் கொடிய விஷ ரஸ ப்ரக்ருதி. 'வூதஃகூ தஃக்ஷயெந ' என்று இங்கே அத்ருச்யமான—அக்ராஹ்யமான — ஸர்வாந்தரமான உட் பொருளை நமக்குள்ளே ப்ரத்யக்ஷம் போன்ற தெளிவோடு ஸாக்ஷாத்கரித்து அநுபவிக்கும்படி இந்த மொழி செய்ய வேண்டும். மாயை என்பதை உறிஞ்சி ஶோஷித்து மாய்த்தாலன்றி, அந்த உள் தத்வம் மறைவு நீங்கி ப்ரகாஶிக்காது. மாயையிலும் ஶடம் வஞ்சனை வேறில்லை. மாயை என்னும் ஶடத்துக்கு ஶத்ருவான 'மொழி' என்பதை இரண்டாம் அடியில் விவரிக்கிறார். மாயையை மாய்க்கும் மொழி. பக்தி

ரஸமான சாந்திரஸ வெள்ள ப்ரபந்தம். இந்நாடகத்தின் பத்தாவதுஅங்கம், விஷ்ணு பக்தி யென்னும் ஸ்த்ரீ பாத்ரத்தின் ப்ரவேஶத்தோடு தொடங்குகிறது.

“ சுஹம் வெைகுண்ஹாசிரகெைவொஸ்ரீயாவிெநாதி நீ ।
விஶ்கிஷ்ஷஸெஹாஸவிஹ ராஸஹடீ நடீ ॥ ”

என்பது அவளுடைய முதல் பேச்சான ச்லோகம். ‘நான் இந்த அத்யாத்ம நாடகத்தில் இன்ப நர்த்தகம் செய்யும் நடீ. லாஸ்யம் தாண்டவம் என்று இரு வகைப்பட்டது நாட்யம். லாஸ்யம் என்பது மெல்லிய லளித நடனம். தாண்டவ மென்பது பைரவமான காளி நர்த்தநம் போன்றது. கோபாலக் குழந்தையின் நவநீத நாட்யம் லாஸ்யம். காளியன் விஷப் படங்களின் மீது கோபாலனது நர்த்தநம் தாண்டவம். நடிகளுக்கு இரண்டு வித நாட்யத்திலும் நைபுண்யம் வேணும். ‘வைகுண்ட னென்ற பகவானுக்கே தாஸ்ய மென்னும் ஏக ஶேஷத்வ ரஸத்தில் ஆநந்தமாக லளித விலாஸங்களோடு நான் லாஸ்ய நர்த்தநம் செய்து இன்புற்று என் ஸ்வாமியையும் விநோதிப்பவள்; ஸகல பாபங்களாகிய விஷத்தை ஸம்ஹாரம் செய்யும் ரௌத்ர தாண்டவ நர்த்தநமும் செய்பவள்’ என்று பேசுகிறாள். இங்கே இரண்டாம் அடியில், மாயப் பேய்ச்சியின் விஷ ரஸத்தையும் அவள் ப்ராணனையும் உறிஞ்சி ஸம்ஹரிக்கும் சடரிபுத்வ வ்யா பாரத்தை வர்ணிக்கிறாள். மாயை என்னும் ப்ரக்ருதிப் பேய்க்கு ‘த்ரிகுணம்’ என்று பெயர். தோஷங்கள் குணமென்னும் பெயரை வைத்துக்கொண்டு, இந்தத் தோஷ விஸ்தாரங்களைக் குணப் பரப்புக்களைப்போல் காட்டிக்கொண்டு சிக்கவைத்து ஏமாற்றுகிறது.

‘ ஜய ஜய ஜஹ்ஜாஜி தஜொஷகுவி தஹணாம் ’

என்று ச்ருதி கீதைத் தொடக்கத்தில் ‘அஜை’ என்னும் ப்ரக்ருதி தோஷத் திற்கே குணமென்று பெயர் வழங்கி ஏமாற்றுகிறதென்று கூறப்பட்டது. குண மென்பது கயிறு. ‘ஹணவிததி’ என்பது கயிறுகளால் செய்யப்பட்ட வலை களின் வீச்சுக்கள். தன்னுடைய நீண்ட மாய வலைகளை வீசிக்கொண்டு நம் மைச் சிக்கச் செய்து, இந்தக் கட்டிலிருந்து தப்ப முடியாமல் கட்டி வைத்திருக் கிறது. இந்த நீண்ட மாயா ஜாலங்கள் இன்பம் தரும் குணம்போல் மேலுக்குக் காணப்பட்டாலும், ஸ்வரூபத்திற்கு விஷமாக மூர்ச்சையைத் தருவது. இப் படித் தன் குண ஜாலங்களை நீளப் பரப்பி நம்மைப் பந்தநம் செய்யும் மாயையை இந்த ப்ரபந்தம் ரஸமென்னும் ப்ரஹ்மத்தின் ஆராவமுத ரஸத்தை ஆவிஷ்கரித்து, அதில் முழுகச் செய்து, இந்தத் துஷ்ட விஷ ரஸத்தை உறிஞ்ஜி வற்றச் செய்து விடுகிறது. இந்த ப்ரஹ்ம ரஸம் சுவைத்து அதை உட்கொள்ளவே மற்ற தோஷ ரஸ ருசிகள் உலர்ந்து வற்றிப்போம். இந்த ரஸம் மற்றை நம் காமங்களை மாற்றும். காமாதிகளை வற்றச் செய்யும் காம ரஸம் இது.

‘ வாஸம்வஸீதொ ஹவஜஞுயிஹவ நஜ்ஜ நா நாம் ஜ நா நாழ ’

என்றபடி, அநாதிகால பரம்பரையாக ஸம்ஸாரிகள், அகாதமான ஸம்ஸார ஸாகரத்தில் முழுகிக் கொண்டே யிருக்கும் ஆழ்வார்கள். அந்த ஆழ்வார்களுக்கு, ப்ரஹ்மாநந்த ஸாகரத்தில் முழுகிக்கொண்டிருக்கும் இவ்வாழ்வாரும், அவருடைய இன்பமயமான த்ராவிட வேத ஸாகரமும்தான் துணை. இந்த ஸம்ஸார ஸாகர ஆழ்வார்களுக்கும், நம்மாழ்வாரும் அவர் திருவாய்மொழியுமே துணை. இந்த ஸம்ஸார ஸமுத்ரத்துக்கு அக்கரை (பாரம்) லக்ஷ்மீ தேவியோடு இணை பிரியாமலிருக்கும் ப்ரஹ்ம மென்னும் ப்ரத்யக் தத்வமான ஹிரண்ய நிதி. ஸதா காலமும் லக்ஷ்மீ கூட வஸிக்கும் நிதி. எல்லாருடைய ஹ்ருதய குஹை யிலும் அத்ருச்யமாய்க் கிடக்கும் நிதி. காருண்ய ப்ரபையால் வித்யுல்லேகை போல் பாஸ்வரமாயுள்ள நிதி. 'ஶ்ரீநிதிம் ஸாக்ஷாத்காரயந்' பகவானென்னும் நிதியை 'அகலகில்லேனிறையு' மென்று பிரியாமல் ரமாதேவி நித்ய ஸந்நிஹிதமாயிருக்கிறாள். 'தாமரையாள் கேள்வனொருவனையே நோக்குமுணர்வு' என்று இத்திருவாய்மொழி முழுவதும் ச்ரிய: பதியை விட்டு எள்ளளவேனும் பிரியாதது. இந்த ப்ரபந்தம் திரு வாய்ந்த மொழி; திரு அகலாத மொழி; ப்ரதி நியதரமா ஸந்நிதாநமான காவ்ய நிதி. 'திருவாய் மொழி' என்பதற்கு 'ப்ரதி நியதரமா ஸந்நிதாநம் நிதாநம்' ஸம்ஸ்க்ருத ப்ரதிபத மென்பது ரஸிக்கத் தக்கது. ஹ்ருதய குஹையில் லக்ஷ்மியோடு பிரியாமல் குடி கொண்டிருக்கும் நிதி. ஹ்ருதயத்துக் குள்ளேயே ஸர்வாந்தரமாய் அந்தராத்மாவாய் ப்ரத்யக்குகளுக் கெல்லாம் ப்ரத்யக்கான உள் தத்வ நிதி. இந்த ச்லோகத்தின் வ்யாக்யாநத்தில் ஸ்ரீரங்க ராமாநுஜ ஸ்வாமி 'ப்ரத்யக்' என்னும் பதத்திற்கு, 'ஸர்வாஹமர்த்த ப்ரத்யக்த்வம் நியமம்' என்று பொருள் ஸாதித்தார். எல்லோர்க்கும் 'அஹம்' என்பது உயிரான உள் தத்வம். அஃதன்றியில் ஜீவன் உயிரற்றதாகும். ஸம்ஸார தசையில் பரமாத்மா ஜீவனுக்கும் உள்ளுயிர் என்று நிச்சயமும் உணர்வு மில்லாதவர்க்கு, உடம்போடு கூடிய ஜீவனில் 'நான்' என்னும் உணர்வு இருக்கிறது. ஜீவனென்னும் உயிரும் பரமாத்மாவின் ஶரீரமே. ஸம்ஸார தசையில் ஜீவனில்லாத ஶரீரம் எப்படி ம்ருத ஶரீரமாய் அஸத்து போன்றதாகுமோ, அப்படியே பரமாத்மா என்னும் ப்ரத்யக் (உயிர்) கூடியில்லாவிடில் ஜீவதத்வமும் உயிரற்றதாய் அஸத்தாகும். பரமாத்மா ஒன்றுதான் ஸ்வநிஷ்டமான ஸ்வதந்தரமான வஸ்து. ஜீவன்கள் அதன்றியில் தனியே நிற்கக்கூடிய ஸ்வநிஷ்ட வஸ்து வல்ல. ஜீவன்கள் பரமாத்மாதீநமான – அதை விட்டுத் தனிமையா யிருக்கவே முடியாத – அப்ருதக் ஸித்த ப்ரகாரங்கள். முக்த தசையில் தத்வமான உயிரும் உடலும் ஸ்வயம் ப்ரகாஶமாய்ப் பாஸிக்கும் பொழுது, பரமாத்மா வென்னும் உயிர்க்குயிரான ஸர்வ ப்ரத்யக்கில் 'அஹம்' என்னும் உயிருணர்வு விச்ரமிக்கும். பரமாத்மா என்னும் வஸ்துவின் ஒரு ப்ரகாரமாகத் தான் இருப்பதாகவே உணர் விருக்கும். கர்ப்பத்திலேயே வாமதேவர் பகவத் கடாக்ஷத்தால் ப்ரஹ்மாபரோக்ஷத் தெளிவு பெற்றவர். அவர், ஸர்வர்க்கும் உயிராயுள்ள பரமனுக்குள் புகுந்து, அந்த ஆவேஶத்தால் தன்னை மறந்து ஸர்வாந்தர்யாமிக்குள் 'அஹம்' என்னும் அநுபவம் சென்று விட்டதால், மநு ஸூர்யர் முதலிய எல்லா உயிர்களோடும் ஏதாத்மாநுபவத்தால் ஸார்வாத்ம்ய உணர்ச்சி பெருகி ஸூத்ரகாரர் வர்ணித்த ஶாஸ்த்ர த்ருஷ்டி அநுபவம்

பெற்ருர். ப்ரஹ்லாதரும், கர்ப்பத்தில் நாரதரால் தத்வோபதேசம் பெற்று ‘விஸ்ம்ருதாத்மாநம்’ ‘தந்மயத்வமவாபாக்ர்யம் மேநே சாத்மாநமச்யுதம்’ என்று பராசரர் வர்ணித்தபடி தன்னை மறந்து அச்யுத மயராகி அங்கே அஹம் புத்தி சென்றது. அதை யிட்டு

“ஸர்வக3த்வாத3நந்தஸ்ய ஸ ஏவாஹமவஸ்தி2த:।
மத்த: ஸர்வமஹம் ஸர்வம் மயி ஸர்வம் ஸநாதநே॥”

‘அநந்தன் ஸர்வத்துக்கும் ஆத்மாவாக வ்யாபித்திருப்பதால் அவனே என்னுக நிற்கிருன். காண்கின்றதெல்லாம் என்னிட மிருந்து உத்பத்தியாவது. நானே இவ்வுலகெல்லாம்; எல்லா உலகும் என்னிடமே நிற்கிறது, என்ருர். அதுபோல் இவ்வாழ்வாரும் பிறவியிலேயே ப்ரஹ்ம ஸாக்ஷாத்காராநுக்ரஹத்தில் ப்ரஹ்மத்திடம் ‘நான்’ உணர்ச்சியால் ஸார்வாத்ம் யாநுபவம் பெற்று ‘கடல் ஞாலம் செய்தேனும் யானே’ என்ற பாடினர். ‘தானே லெம்பெருமான் அவனென்னுகி நின்ருெழிந்தான்’ என்று இவர் ஸாரப். ‘நாம் தெளிய ஓதி’ என்ற இடத்திலும் ‘நாம்’ என்னும் புத்தி ஸர்வர்க்கும் ப்ரத்யக்கான பரமனிடம் சென்று அநுபவிக்கும் ஸூக்ஷ்மத்தை நன்ருய்த் தெளியும்படி த்ராவிட வேதத்தை நன்கு ஓதி உணர்ந்ததாகவும் பொருள் கொள்ளலாம் என்பதற்கு இங்கே ‘வ்ருத்தய:’ ‘வ்ருத்திக்ஷயேந’ என்று ஸாதித்தது நல்ல சான்ருகும். ‘வ்ருத்தய:’ என்பது ஜ்ஞாநம் விஷயீ. பகவானென்னும் விஷயியான உள் தத்வத்தை வெளி விஷயம் போல் ப்ரத்யக்ஷீகரித்து அநுபவிக்கச் செய்வதால் இக்காவ்யத்துக்குப் ‘பகவத் விஷயம்’ என்று திருநாமம் அமைந்தது போலும்.

[தொடரும்.]

ஜீவனுடைய ஸ்வரூபத்தை விளக்குமிடங்களில் சாஸ்த்ரங்கள் ‘ஜீவன் ஜ்ஞாநம், அநந்தம், அமலம், அணு’ என்று இம்முகங்களாலே நிரூபிக்கின்றன. இவ்வாறு நிரூபிப்பதுடன் ‘சேஷோ ஹி பரமாத்மந:’ இத்யாதிகளாவ் பரமாத்மாவுக்கு ஆத்மா சேஷமாயிருப்பதையும் ஆத்மாவுக்கு நிரூபகமாகச் சொல்லுகின்றன. இவைகளுள் எது அந்தரங்க நிரூபகம் என்பதை ஸ்ரீ ஆழ்வார் ‘அடியேனுள்ளான்’ [8-8-2] என்னும் வாக்யத்தால் நிர்ணயித்து அநுக்ரஹத்திருக்கிருர். இதற்கு ஸம்வாதமாக ஈட்டில் ஒரு ஐதிஹ்யம் உண்டு. எம்பெருமானர் திருவோலக்கத்திலே இந்த விஷயம் ஒரு ஸமயத்தில் ப்ரஸ்துதமாக எம்பெருமானர் ஆழ்வானைப் பார்த்து ‘ஆழ்வான்! இதை ஸ்ரீ திருக்கோட்டியூர் நம்பி ஸந்நிதியில் பெற்று வாரும்’ என்று வாக் காட்டியருளினர். அவரும் அவ்விடம் எழுந்தருளி, நம்பியை ஸேவித்து இந்த வ்ருத்தாந்தத்தை விண்ணப்பஞ்செய்து ஆறு மாஸம் ஸேவித்திருக்க, அவர் இரங்காமையாலே ஆழ்வான் எம்பெருமானர் ஸந்நிதிக்குத்திரும்பிப் போகப்புக, நம்பி அவரை அழைத்து ‘அடியேனுள்ளான் என்றபடி கண்டாயே’ என்று அருளிச்செய்தார். ஆழ்வான் ‘க்ருதார்த்தனனேன்’ என்று திரும்ப எழுந்தருளினன். இது தான் அந்த ஐதிஹ்யம். சேஷத்வம் அந்தரங்க நிரூபகமென்பதன் பொருளென்னவென்ருல் ‘ஆத்மாவென்னும் வஸ்துவாளது பகவானுக்கு ப்ரகாரபூதமாயிருக்கின்றது; அதனலேயே அதற்கு ஸத்தை [இருப்பு] ஏற்படுகின்றது’ என்பதுதான்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

பகவதவதாரத்தின் முக்ய ப்ரயோஜநம்

[ஸ்ரீ. உப. வங்கீபுரம் வாஸுதேவாசார்யர், த்யாகராயநகர்]

நித்ய ஶுத்தனுகவும் ஜ்ஞாநாநந்தைக ஸ்வரூபனுகவும் இருக்கும் பகவான் அத்யந்தம் ஹேயமான இந்தப் பூமியில் பிறக்கிருனென்றும் நம்மைப் போல் ஸுக துக்கங்களை அநுபவிக்கிருனென்றும் சொல்வது அவனுடைய பெருமைக்குக் குறைவன்ருே? என்று சில மதஸ்தர்கள் பகவதவதாரத்தை நிராகரிக்கிருர்கள். நமது ஶாஸ்த்ரமோவென்ருல் "அஜாயமாநோ பஹுதா விஜாயதே" [பகவான் பிறப்பற்றவனே; ஆனுலும் பல பிறப்பும் பிறக்கிருன். அதாவது:— நம்மைப்போல் கர்மத்தின் பலத்தால் அவனுக்குப் பிறப்பு இல்லை; தனது இச்சையினுலேயே கணக்கற்ற பிறப்புக்களை பிறக்கிருன்] என்று அவனுக்குப் பிறப்பைச்சொல்லுகின்றது. ஸ்ரீதேஶிகன் இந்தப் பிறப்பை ஒரு த்ருஷ்டாந்தத்தை முன்னிட்டு அந்யாத்ருஶமாக விளக்குகிருர். அந்த ப்ரகரணம் அந்தர்யாமி அவதாரத்தைப் பற்றியதாக இருந்தாலும், எல்லா அவதாரங்களுக்கும் அந்த விவரணம் அந்வயிக்குமாதலால் அதை இவ்விடத்த்ல் உதாஹரிக்கிருேம்.

"ஜநக: ஸுதஹேதோ: பங்கே த்ருஷ்டிவிஷயே ஸரஸிஜாக்ஷ: ஸ்வயமவதீர்ணோ விசரதி தநயம் த்ராதும்"

[ஒரு பிதா தனது குழந்தையைக் கையில் வைத்துக் கொண்டு லாலநம் செய்து வரும்பொழுது அந்தக் குழந்தை கை தவறிக் கீழே சேறுள்ள ப்ரணாளிகையில் விழுந்துவிட்டால், அந்தத் தகப்பன் கோஞ்சமேனும் கூசாமல் அந்தக் குழந்தையை எடுப்பதற்காக எப்படி தானும் அந்தச் சேற்றில் குதிப்பனே, அம்மாதிரியே ஜகத்திற்கெல்லாம் பிதாவாக இருக்கும் பகவான் தனது ப்ரஜைகளாயும் ஸம்ஸாரமாகிற சேற்றில் விழுந்துமிருக்கும் நம்மை உத்தரணம் செய்வதற்காக எவ்வித ஶங்கையையும் செய்யாமல் எல்லா யோநிகளிலும் பிறக்கிருன்]. இந்த ப்ராக்ருத லோகத்தை ஜுகுப்ஸநீயமென்று சொல்வதும் தவறுதலே. பகவானுடைய விபூதிகளுள் ஒன்றும் ஜுகுப்ஸிதமாகமாட்டாது. நமக்கு சிற்சில பதார்த்தங்கள் ஹேயங்களாகத் தோன்றுகின்றன என்பது உண்மையே. ஆனுல் அவை அப்படித் தோன்றுவதெல்லாம் நமது ஜந்மாந்தர கர்மத்தின் பலமே. அகர்ம வச்யர்களாக இருக்குமவர்களுக்கு பகவத் விபூதியிலுள்ள எல்லாப் பதார்த்தங்களும் அநுகூலமாகவே இருக்கும். பகவான் அகர்ம வச்யனுதலால் அவனுக்கு இவ்விடத்தில் வந்து பிறப்பது ஒருவித ஹாநியையும் விளைவிக்கமாட்டாது. அவன் ஸுக துக்கங்களை அநுபவிக்கிருனென்பதும் அபிநயமேயொழிய யதார்த்தாநுபவமன்று. ஆகையால் பிறக்கிருனென்பதை நிராகரிக்க ஹேதுவொன்றுமில்லை.

பகவான் ஸகலவித ஶக்தியும் வாய்ந்தவனன்ருே? "ஸங்கல்பாதேவ ப்ரஹ்மோ ஸ்ருஷ்டி:" என்கிறபடி ஜகத் ஸ்ருஷ்டியைக் கேவலம் இச்சையாலேயே செய்ய

வில்லையோ? அப்படிப்பட்டவனுக்கு இந்த லோகத்தில் பிறந்தே செய்யவேண்டிய கார்யங்களும் உண்டோ?' என்று ஒரு ஶங்கை தோன்றலாம். இந்த ஶங்கைக்கு ஸமாதானம் பகவத் கீதையில் நன்கு விளக்கப்பட்டிருக்கின்றது. பகவத் கீதையில் நாலாவது அத்யாயத்தில் ஸ்ரீ கீதாசார்யன் தனது அவதார ரஹஸ்யத்தை அர்ஜுநனுக்கு உபதேஶிக்கிறான். அவ்விடத்தில் கண்ணன் தனது அவதாரத்தின் ப்ரயோஜநத்தைப் பின்வருமாறு வெளியிடுகிறான்:—

"பரித்ராணாய ஸாதூநாம் விநாஶாய ச து₃ஷ்க்ருதாம்।
த₄ர்மஸம்ஸ்தா₂பநார்தா₂ய ஸம்ப₄வாமி யுகே₃ யுகே₃॥"

[ஸாதுக்களை ஸம்ரக்ஷிப்பதற்கும் துஷ்டர்களை நஶிப்பிப்பதற்கும் தர்மத்தை ஸ்தாபிப்பதற்கும் நான் யுகம் தோறும் பிறக்கிறேன்.] இதற்கு ஸ்ரீ பாஷ்யகாரர் பின்வருமாறு உரை அநுக்ரஹித்திருக்கிறார். இவ்விடத்தில் 'ஸாதுக்கள்' என்னும் பதம் பக்தோத்தமர்களையே குறிக்கின்றது. எவர்களுக்கு ஸாக்ஷாத் பகவத் தர்ஶநம் கிடையாவிட்டால் ஆத்ம தாரணம் என்பது ஸாத்ய மில்லையோ, எவர்களுக்கு அவனுடைய வியோகம் க்ஷணமாத்ரம் நேர்ந்தாலும் "த்ருடிர் யுகா₃யதே" என்கிறபடி ஒரு க்ஷணம்கூட ஆயிரம் கல்பங்களாகத் தோன்றுகிறதோ, அவர்களே ஸாதுக்களாவார்கள். பகவானுடைய ஸ்வரூபம் முதலியவை ஶாஸ்த்ரங்களில் பஹுவாக விளக்கப்பட்டிருக்கையிலும், அவை மநுஷ்யர்களுடைய வாக்குக்கும் மநஸ்ஸுக்கும் எட்டாதபடி அவ்வளவு ஸூக்ஷ்மமாக இருக்கிறபடியால், அவை இந்த ஸாதுக்களுக்கு அவ்வளவாக உபகாரகங்களாகமாட்டா. பகவானுடைய திவ்யமங்கள விக்ரஹத்தை ஸாக்ஷாத்தாகத் தர்ஶநம் செய்தால் மாத்ரம் அவர்களுடைய ஆவல் ஶாந்தமாகும்; அதுதான் அவர்கள் ப்ரார்த்திப்பது. அவர்கள் பக்தோத்தமர்களானபடியால் அந்த ப்ரார்த்தனையை நிறைவேற்ற ஸங்கல்பித்து, ஸ்ரீ பகவான், அதை நிறைவேற்றுவது தனது அவதாரத்தாலேயே ஸாத்யமாகக் கூடியதாதலால், இம்மாதிரி அவதரிக்கிறான். மாதா பிதாக்களாகிற ஸ்ரீ கௌஸல்யாதேவி ஸ்ரீ தஶரத சக்ரவர்த்தி முதலியவர்களுக்கும் விச்வாமித்ரர் முதலிய பக்தர்களுக்கும் ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகனாகவும், ஸ்ரீ தேவகீ யஶோதை ஸ்ரீ வஸுதேவர் அக்ரூரர் உத்தவர் கோபஸ்த்ரீகள் முதலிய பாக்யஶாலிகளுக்குக் கண்ணனாகவும் திருவவதரித்தது அவர்களுடைய இஷ்டத்தைப் பூர்த்தி செய்யவேண்டுமென்னும் கருத்தாலன்றோ? இவ்விடத்தில் 'த்ராணம்' என்னும் பதம் அநிஷ்ட நிவ்ருத்தியை முன்னிட்டுக் கொண்டிருக்கும் இஷ்ட பூர்த்தியையே குறிக்கின்றது. இந்த ஸாதுக்களுடைய இஷ்டம், பகவானுடைய திவ்ய மங்கள விக்ரஹத்தின் தர்ஶநமும் அவனுடன் ஸம்பாஷணமுமே. இவைகளைக் கொடுப்பதற்கு அவன் அவதரித்தே தீரவேண்டுமன்றோ?

ஸ்ரீ பாகவதத்தில் முதல் ஸ்கந்தம் எட்டாவது அத்யாயத்தில் ஸ்ரீ குந்தீ தேவி ஸ்ரீ க்ருஷ்ணனைக் குறித்து ஸ்தோத்ர மொன்றைச் செய்கிறாள். அதில் ப்ரஸக்தாநு ப்ரஸக்தமாக 'இறப்பும் பிறப்பும் அற்ற ஸ்ரீ பகவான் இந்த விபூதியில் அவதரிப்பது என்ன ப்ரயோஜநத்தை உத்தேசித்து ?' என்பது விசாரிக்கப்பட்டிருக்கின்றது.

“𑌕𑍇𑌚𑌿𑌦𑌾𑌹𑍁𑌰𑌜𑌂 𑌜𑌾𑌤𑌂 𑌪𑍁𑌣𑍍𑌯𑌶𑍍𑌲𑍋𑌕𑌸𑍍𑌯 𑌕𑍀𑌰𑍍𑌤𑌯𑍇। 𑌯𑌦𑍋𑌃 𑌪𑍍𑌰𑌿𑌯𑌸𑍍𑌯𑌾𑌨𑍍𑌵𑌵𑌾𑌯𑍇 𑌮𑌲𑌯𑌸𑍍𑌯𑍇𑌵 𑌚𑌨𑍍𑌦𑌨𑌮𑍍॥ 𑌅𑌪𑌰𑍇 𑌵𑌸𑍁𑌦𑍇𑌵𑌸𑍍𑌯 𑌦𑍇𑌵𑌕𑍍𑌯𑌾𑌂 𑌯𑌾𑌚𑌿𑌤𑍋𑌽𑌭𑍍𑌯𑌗𑌾𑌤𑍍। 𑌅𑌜𑌸𑍍𑌤𑍍𑌵𑌮𑌸𑍍𑌯 𑌕𑍍𑌷𑍇𑌮𑌾𑌯 𑌵𑌧𑌾𑌯 𑌚 𑌸𑍁𑌰𑌦𑍍𑌵𑌿𑌷𑌾𑌮𑍍॥ 𑌭𑌾𑌰𑌾𑌵𑌤𑌰𑌣𑌾𑌯𑌾𑌨𑍍𑌯𑍇 𑌭𑍁𑌵𑍋 𑌨𑌾𑌵𑌇𑌵𑍋𑌦𑌧𑍇𑌃। 𑌸𑍀𑌦𑌨𑍍𑌤𑍍𑌯𑌾 𑌭𑍂𑌰𑌿𑌭𑌾𑌰𑍇𑌣 𑌜𑌾𑌤𑍋 𑌹𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌭𑍁𑌵𑌾𑌰𑍍𑌥𑌿𑌤𑌃॥ 𑌭𑌵𑍇𑌽𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌕𑍍𑌲𑌿𑌶𑍍𑌯𑌮𑌾𑌨𑌾𑌨𑌾𑌮𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌕𑌾𑌮𑌕𑌰𑍍𑌮𑌭𑌿𑌃। 𑌶𑍍𑌰𑌵𑌣𑌸𑍍𑌮𑌰𑌣𑌾𑌰𑍍𑌹𑌾𑌣𑌿 𑌕𑌰𑌿𑌷𑍍𑌯𑌨𑍍𑌨𑌿𑌤𑌿 𑌕𑍇𑌚𑌨॥”

[கர்மாதீநமாகப் பிறப் பென்பதே உமக்கு இல்லையே. அப்படிப்பட்ட நீர், எதற்காக நாங்கள் பிறப்பதுபோல் இந்தப் பூமியில் வந்து பிறக்கிறீர்? ஒருக்கால் உமக்கு அத்யந்தம் ப்ரியனுன யது மஹாரராஜனுக்குக் கீர்த்தியைப் பரவச் செய்யவேண்டு மென்னும் எண்ணத்துடன், மலய பர்வதத்தில் சந்தந வ்ருக்ஷம் போல, அந்த யதுவின் வம்சத்தில் ஸ்ரீ க்ருஷ்ணனுகப் பிறந்தீரோ? இல்லாவிட்டால் வஸுதேவன் ப்ரார்த்தனைக்கு இணங்கி, அந்த ப்ரார்த்தனையை நிறைவேற்ற வேண்டு மென்னும் எண்ணத்துடன் தேவகியின் வயிற்றில் பிறந்தீரோ? அந்தப் பிறப்பினுல் நல்லோர்க்கு க்ஷேமமும் தீயோர்க்கு நாஶமும் ஸம்பவித்தன வன்றே? இல்லாவிட்டால் ஸமுத்ரத்தின் நடுவில் பாரம் தாங்கமாட்டாமல் ஜலத்தில் அமிழ்ந்து விடும்போலிருக்கும் கப்பல் போல், துஷ்ட ஜநங்களின் ஆதிக்யத்தால் வருந்தும் பூமியின் பாரத்தை நீக்கவேண்டு மென்னும் எண்ணத்துடன் சதுர்முகனுடைய ப்ரார்த்தனைக்கு இணங்கி இவ்விடத்தில் வந்து பிறந்தீரோ? இல்லாவிட்டால், இந்த ஸம்ஸாரத்தில் தாபத்ரயத்தால் பீடிக்கப்படும் தீனர்களான ஜநங்கள், தமது காதுக்கும் மநஸ்ஸுக்கும் இனிமையைக் கொடுக்கக் கூடிய உம்முடைய கதைகளைக் கேட்டு அதனுல் தமது தாபங்களை மறந்து ஆநந்தத்தை அடையட்டு மென்னும் எண்ணத்துடன் இந்தப் பிறப்பைச் செய்து கொண்டிரோ?”]

இவ்வாறு பலவிதமாக உல்லேகித்துக் கேட்ட ஸ்ரீ குந்தி தேவியின் தாத்பர்ய மென்ன? இந்த நாலு உல்லேகங்களுள் எதில் அந்த பக்தோத்தமைக்கு ப்ரதாந நோக்கம் என்பதை விசாரிக்க ப்ராப்தமாகின்றது. நான்காவதாகச் சொல்லப்பட்டிருப்பதே. தீந சேதஸ்ஸை உடையவர்களுக்குத் தன் அவதாரத்தின் ஸாக்ஷாத் தர்சநம் சேஷ்டித ச்ரவணம் இவைகளைக் கொடுக்க வேண்டு மென்று எண்ணியே அவள் பேசி யிருக்கிருளென்று சொல்லலா மென்று தோன்றுகிறது. மற்றவைகளும் ப்ரயோஜந மாகலாம். ஆனல் அவை யெல்லாம் ஸங்கல்ப மாத்ரத்தாலேயே ஸாதித்துவிடக் கூடியவை யாதலால், அவைகளைப் பிறந்தே ஸாதித்துக் கொடுக்கவேண்டு மென்பதில்லை. ஆகையால் இதுவே அவதாரத்துக்கு முக்ய ப்ரயோஜநமாக க்ரஹிக்கப்பட வேண்டும். இது ஸங்கல்ப மாத்ரத்தால் ஸாதிக்கப்படக் கூடாததன்றே? நிற்க: இந்த ச்லோகங்களுக்கு அடுத்தபடியாக வரும்

‘𑌶𑍃𑌣𑍍𑌵𑌨𑍍𑌤𑌿 𑌗𑌾𑌯𑌨𑍍𑌤𑌿 𑌗𑍃𑌣𑌨𑍍𑌤𑍍𑌯𑌭𑍀𑌕𑍍𑌷𑍍𑌣𑌶𑌃 𑌸𑍍𑌮𑌰𑌨𑍍𑌤𑌿 𑌨𑌨𑍍𑌦𑌨𑍍𑌤𑌿 𑌤𑌵𑍇𑌹𑌿𑌤𑌂 𑌜𑌨𑌾𑌃।
𑌤 𑌏𑌵 𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑍍𑌯𑌚𑌿𑌰𑍇𑌣 𑌤𑌾𑌵𑌕𑌂 𑌭𑌵𑌪𑍍𑌰𑌵𑌾𑌹𑍋𑌪𑌰𑌮𑌂 𑌪𑌦𑌾𑌂
𑌬𑍁𑌜𑌮𑍍॥”

[ஹே க்ருஷ்ண! எவர்கள் உன்னை ஸாக்ஷாத்கரித்தும் நீ செய்தருளிய சேஷ்டிதங்களைக் கேட்டும் அந்தக் கதைகளைப் பாடியும் அவைகளை ஸ்மரித்துக் கொண்டும் பொழுது போக்குகிறார்களோ, அவர்களுக்கே எவ்வித விளம்பமு மின்றிக்கே ஸம்ஸார விமோசநம் ஏற்படுகின்றது] என்னும் இந்த ச்லோகம் இந்தப் பொருளை உபஸம்ஹரிக்கின்றதன்றோ? "தவகதாம்ருதம் தப்தஜீவநம்" [உன்னுடைய கதையாகிற அம்ருதமே தாபத்ரயத்தால் பீடிக்கப் படுமவர்களுக்கு ஜீவந உபாயம்] என்பதும், "விபதஸ்ஸந்து நஸ்ஸச்வத் தத்ர தத்ர ஜகத்குரோ" என்பதும், கதாச்ரவணத்தையே புகழ்ந்து பேசுகின்றன. ஸ்ரீ பாஷ்யகாரரும் "ஸாதுபரித்ராணம் ... " [துஷ்டர்களை நசிப்பித்து அதனால் பூமியின் பாரத்தை நிவர்த்திப்பிப்பது என்பது ஒரு வ்யாஜமே; அது ஸாது பரித்ராணமாகிற மஹா ப்ரயோஜநத்திற்கு ஆநுஷங்கிகமே. மாம்ஸக் கண்ணால் தனது விக்ரஹத்தை ஸாக்ஷாத்கரிக்கும்படி செய்வதே அவனுடைய ஸௌலப்யத்தைக் காட்டுகின்றது. இவ்வாறு தனது ஸௌலப்யத்தை விளக்குவது மாத்ர மின்றிக்கே மற்று மொரு விசேஷித்த ப்ரயோஜநமும் இதற்குச் சொல்லக்கூடும். அது என்ன வென்றால்:—அந்தத் திவ்யமங்கள விக்ரஹத்தின் தர்சநத்தை நமக்கு அப்போதே அநுபாவ்யமாகச் செய்வதும் அவனுடைய அவதாரத்தின் ப்ரயோஜநமென்பது தான். பூபார நிவ்ருத்தி முதலியவைகளை ஆநுஷங்கிக ப்ரயோஜநமென்று பாஷித்திருக்கிறார்.] உண்மையாகவே அதிமாத்ரம் மந்த மதிகளாக இருக்கும் நம்மைப் போன்றவர்களுக்கு அவதார கதைக ளிரா விட்டால் வேறு அநுபவிக்கக் கூடிய விஷயம் ஏது?

இவ்விடத்தில் மற்றுமொரு கேள்வி பிறக்கலாம். பகவான் தனது அவதாரங்களில் தன்னை எப்பொழுதும் ஸுகத்தை அநுபவிப்பதாகக் காண்பித்துக் கொள்ள வில்லை; அநேக ஸமயங்களில் தான் மஹத்தான துக்கத்தை அநுபவிப்பதாகவும் காண்பித்துக் கொள்ளுகிறான். இது ஏன் என்பதுதான் அந்தக் கேள்வி. ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகனை அவதரித்த காலத்தில், தான் ராஜ்யத்தை இழந்து, அரண்யத்தில் வாஸம் பெற்று, அவ்விடத்தில் பார்யையைப் பறிகொடுத்து, 'மரமே நீ கண்டாயோ? செடியே நீ கண்டாயோ!' என்று மஹத்தான துக்கத்தை அநுபவித்தான். "ஜநஸ்தாநே ... " [ப்ரியையைப் பறிகொடுத்து ராமன் அநுபவித்த துயரத்தை நான் என் சொல்வேன்? 'ஏன் அப்பா அழுகிறாய்?' என்று கேட்பதற்குக் கூட ஒரு ஜந்துவும் இராமலிருக்கும் நடுக்காட்டில் அவன் அழுத அழுகை கல்லையும் கரைக்கும்; வஜ்ரத்தையும் தூளாக்கு மன்றோ?] என்பதன்றோ அவனுடைய துக்காநுபவம் நிற்கும் நிலை? பிறகு ஒரு காலத்தில், ஆஸந்ந ப்ரஸவையாக இருந்த ப்ரியையை எவ்வித ஸஹாயமு மின்றிக்கே காட்டுக்கு அனுப்பிவிட்டு,

"துக்கஸம்வேதநாயைவ ராமே சைதந்யமாஹிதம்"

[என்னிடத்தில சைதந்யம் எதற்காக இருக்கின்றதென்றால், துக்கத்தின் கொடுமை எவ்வளவு உள்ளது என்பதை உணர்த்துவதற்காகவே அன்றோ?] என்று

கதறுகிறுன். ஸீதாப் பிராட்டி அநுபவித்த கஷ்டம் யாருக்குத் தெரியமாட்டாது? பர்த்தாவை விட்டுப் பிரிந்து க்ரூரனுன பத்துத்தலை ராவணன் வசமாகி, தன்னைச் சேர்ந்தவர்களின் காற்றுக்கூட அடியாத இடமாகிற ஒரு வநத்தில் குரூபிகளான ராக்ஷஸிகளின் நடுவில் வைக்கப்பெற்று, ப்ரதி தினமும் அந்த ராக்ஷஸிகளால் அதிக்ஷிப்தையாய் அவள் பட்ட கஷ்டத்தை நினைத்தால் எவனுடைய மனஸ்தான் உருகாது?

"விஷஸ்ய தாதா ந ஹி மெடீஸ்தி கஸ்சித"

[ஐயோ! விஷத்தைப் புஜித்து ப்ராணனை விடலாமோ வென்றுல், அப்படி விஷம் கொடுப்பவன் கூட இவ்விடத்தில் காணப்படவில்லையே] என்று கதறினுளன்றே?

இப்படி துக்காநுபவத்திற்கு ப்ராதாந்யம் கொடுத்துக் கதை வர்ணிக்கப்படுகிறது பகவதவதாரத்தில் மாத்ரமன்று. அந்தப் பகவானிடத்தில் பூர்ண பக்தியைச் செய்யும் பக்தோத்தமர்களின் கதைகளிலும் நாம் இம்மாதிரி துயரத்தின் அநுபவத்தையே பெரும்பாலும் காண்கிறோம். "ஹா க்ருஷ்ண த்வாரகாவாஸிந் க்வாஸி யாதவநந்தந। இமாம் அவஸ்தாம் ஸம்ப்ராப்தாம் அநாதாம் கிமுபேக்ஷஸே।" [ஹே க்ருஷ்ண! நீர் எவ்விடத்தில் இருக்கிறீர்? என்னுடைய கஷ்டத்தை நீர் அறியவில்லையோ? இந்த அவஸ்தையில் என்னை உபேக்ஷிக்கலாமோ?] என்று துச்சாஸநன் கையிலகப்பட்டு மஹத்தான அவமாநத்தை அடைந்த த்ரௌபதி அநுபவித்த கஷ்டத்தைக் காட்டிலும் பெரிய கஷ்டமு முண்டோ? பதிவ்ரதோத்தமையான தமயந்தியின் கதையும் துக்கம் நிறைந்ததாகவே இருக்கிறது. இப்படி நமக்கு நிதர்ஸநமாக வர்ணிக்கப்பட்டுள்ள கதைகளில் துக்காநுபவமே பெரும்பாலும் வர்ணிக்கப்பட்டதாகக் காணப்படுகின்றது. இது என்? 'பகவானுக்குத் துக்காநுபவம் ஸங்கதமாகுமோ?, பகவானுடைய அவதார கதைகளெல்லாம் கேவலம் அபிநயமே என்றுலும், ஏன் பகவான் தான் ஸுகத்தையே அநுபவிப்பதாக அபிநயிக்கக்கூடாது? இந்தத் துக்காநுபவ அபிநயத்திற்கு ஒரு கருத்து இருக்கவேண்டு மன்றே?' என்று ஒரு கேள்வி பிறக்கலாம்.

இது, நம்முடைய சித்தத்தைத் தன்னிடம் ஸுலபமாக ஆகர்ஷிக்க வேண்டும் என்னும் எண்ணத்தாலேயே என்று தோன்றுகிறது. நமது ஸுஹ்ருத்துக்கள் ஸுகித்தால் அதைப் பார்க்கும் நமக்கு ஒருவித ஸுகாநுபவமும், அவர்கள் துக்கித்தால் அவர்களுடைய துக்கத்தால் நமக்கு துக்காநுபவமும் உண்டாவது ஸஹஜம். ஆனுல், லோகாநுபவத்தை ஊன்றிப் பார்த்தால், ஸுஹ்ருத்துக்களின் ஸுகாநுபவத்தால் நமக்கு ஏற்படும் ஸௌக்யத்தைக்காட்டிலும் அவர்களுடைய துக்காநுபவத்தைப் பார்த்து அதனுல் ஏற்படும் ஔத்ஸுக்யமானது பன்மடங்கு தீவ்ரமானது என்பது விளங்கும். ஒருவன் கஷ்டப்படுவதைப் பார்க்கையில் நமது சித்தம் உருகுவதுபோல அவன் ஸுகிப்பதைப் பார்த்து உத்ஸுகமாவதில்லை. ஸ்ரீ வால்மீகி பகவான் இந்த விசேஷத்தை ஒரு ச்லோகத்தில் நன்கு ஸூசிப்பித்திருக்கிறுர். ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகனுடைய கல்யாண குணங்களை வர்ணித்து வரும் காலத்தில், அவருடைய ஸமஸுக ஸுகித்வத்தையும் ஸமதுக்க துக்கித்வத்தையும் ப்ரஸ்தாவிக்கையில்,

“ வ்யஸநேஷு மநுஷ்யாணாம் ப்ருஶம் பவதி து:கித: ॥
உத்ஸவேஷு ச ஸர்வேஷு பிதேவ பரிதுஷ்யதி ॥ ”

[ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகன், தனது ப்ரஜைகள் கஷ்டப்படுகிறார்கள் என்பதைக் கேட்டால் ப்ருஶம் துக்கிதராகிறார்; அவர்கள் ஸுகிக்கிறார்கள் என்பதைக் கேட்டால் அவர்களின் தந்தையைப்போல் தாமும் ஸுகிக்கிறார்]. இவ்விடத்தில் துக்கத்தை ஸ்வயமே அநுபவிக்கும் ப்ரஜைகளின் கஷ்டத்தைக்காட்டிலும் இவனுடைய கஷ்டம் அதிகரித்து நிற்கின்றது (ப்ருஶம்) என்று துக்க கார்யத்தை வர்ணித்திருக்கிறார். ஸுக கார்யத்தை வர்ணிக்கும் காலத்திலோ, அந்தப் பாகத்தை அவ்விதம் சொல்லாமல், மூன்றாவது மநுஷ்யனுகிற தந்தையின் துக்கத்திற்குத் துல்யமாக இருக்கின்றது என்று சொல்லியிருக்கிறார். ஸஹாநுபவத்தில் ஸஹஜமாக விஶேஷித்த ஸ்வபாவத்தையுடைய தாயின் துக்கத்திற்குத் துல்யமென்றுகூடச் சொல்லவில்லை. இதைப் பார்த்தால் ஸ்ரீ வால்மீகி பகவான் ஸமதுக்க துக்கித்வமானது ஸமஸுக ஸுகித்வத்தைக் காட்டிலும் தீவ்ரதரமென்று க்ரஹித்திருப்பது வெளியாகின்றதன்றோ? இந்த ச்லோகத்தின் ரஸனை ஸவாரஸ்யத்தைப் பார்த்தாலும் இது நன்றாக விளங்கும். ஸமதுக்க துக்கித்வத்தை முதலிலும் அதற்குப் பிறகே ஸம ஸுகஸுகித்வத்தை அந்வாசயம் போலவும் ப்ரஸ்தாவித்திருக்கிறார். இவ்வாறு துக்க ஸம்வேதநத்திற்கு இயற்கையாயுள்ள இந்த உத்வேகத்தைக் கணிசித்தே ஸ்ரீபகவான் தனது அவதாரங்களில் தான் துக்கத்தை அதிகமாக அநுபவிப்பதாக அபிநயிக்கிறான் என்று சொல்ல வேண்டும். அநாதி மாயையில் அகப்பட்டுக் க்லேஶப்படும் ப்ரஜைகளின் சித்தத்தை ஆகர்ஷிப்பதன்றோ அவனுடைய முக்ய நோக்கம்?

ஸ்ரீ:

பஞ்சாங்க ஸங்க்ரஹம்.

ஸர்வஜித் ௵ ஆனி ௴ (மிதுந) ௴.

1௳ ஞாயிற்றுக்கிழமை	...	சூந்ய திதி: ஸர்வ ஏகாதசீ: மிதுந ரவி 0–3. [மிதுந ஸங்க்ரமண தர்ப்பணம்]
2௳ திங்கட்கிழமை	...	மிதுந க்ருஷ்ண த்ரயோதசி திதி
4௳ புதன்கிழமை	...	ஸர்வ அமாவாஸ்யை
9௳ திங்கட்கிழமை	...	மிதுந சுக்ல பஞ்சமி திதி
10௳ செவ்வாய்க்கிழமை	...	மிதுந சுக்ல ஷஷ்டி ஸப்தமி திதி த்வயம்
11௳ புதன்கிழமை	...	அஷ்டமி திதி
14௳ சனிக்கிழமை	...	ஸ்ரீ பெரியாழ்வார் திருநக்ஷத்ரம்
15௳ ஞாயிறுக்கிழமை	...	ஸர்வ ஏகாதசீ
30௳ திங்கட்கிழமை	...	மிதுந க்ருஷ்ண ஏகாதசி திதி : ஸர்வ ஏகாதசீ வ்ரதம்
31௳ செவ்வாய்க்கிழமை	...	மிதுந க்ருஷ்ண த்வாதசி திதி
32௳ புதன்கிழமை	...	சூந்ய திதி: கடக ரவி 36–41. [கடக ஸங்க்ரமண தர்ப்பணம் : தக்ஷிணாயந புண்யகாலம்]

[**குறிப்பு** :—9௳ ஷஷ்டி திதிக்கு அபராஹ்ண வ்யாப்தி குறைவாக இருப்பதால், 10-ம் தேதியே அந்த ஷஷ்டி திதி. அன்றை திநமே ஸப்தமி திதியும். 9-ம் தேதியில் ஷஷ்டிக்கு $47\frac{3}{5}$ விநாடியே அபராஹ்ண வ்யாப்தி ; 10-ம் தேதியிலோ $0–52\frac{4}{5}$ விநாடி வ்யாபித்திருக்கிறது.]

ஸ்ரீ:

செய்திகள்

தில்லஸ்தாநம் ஸ்ரீ ஸ்ரீநிவாஸப் பெருமாள் ஸந்நிதியில் ஸம்ப்ரோக்ஷணம்

தஞ்சாவூர் ஜில்லா பெரும்புலியூர் என்னும் திவ்ய ஸ்தலத்துக்கு அணித்தான தில்லஸ்தாநம் அக்ரஹாரத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ஸ்ரீநிவாஸப் பெருமாள் ஸந்நிதி விமாந ஜீர்ணோத்தாரணமும், ஷை ஸந்நிதியில் தனிக் கோவில் நாச்சியார் ஸந்நிதி நூதந நிர்மாணமும் ஸமீபத்தில் வேலை முடிந்து, நாளது ஸர்வஜித் ளு சித்திரைமீ 29உ (12—5—47) திங்கட்கிழமை மீந லக்நத்தில் மஹா ஸம்ப்ரோக்ஷணம், பூர்வாங்கமான ம்ருத் ஸங்க்ரஹணம் அங்குரார்ப்பணம் அத்யாபக வேத பாராயண க்ரந்த காலக்ஷேபங்கள் யாகசாலை நித்ய ஹோமங்கள் ததீயாராதநம் இத்யாதிகளுடன் வெகு ஸம்ப்ரமமாக நடந்தேறியது. இம்மஹோத்ஸவத்துக்கு உள்ளூர் ஸ்வாமிகள் யாவரும் ஒருமையுடனும் உத்ஸாஹத்துடனும் ஷை கைங்கர்யத்தை வெற்றி பெற நடத்தி வைத்ததன்றி, வெளியூரினின்றும் பல ஆஸ்திக மஹான்கள் எழுந்தருளி ஸேவை ஸாதித்து ஷை கைங்கர்யத்தில் கலந்துகொண்டு உத்ஸவத்தை மிக்க ச்ரத்தையுடனும் குதூஹலத்துடனும் நடத்தி வைத்தது பெரிதும் போற்றத் தக்கதாகும்.

R. வீராஸாமி ஐயங்கார்,
(தில்லஸ்தாநம்.)

* * * *

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீநிவாஸ மஹாதேசிகாய நம:

ஸ்ரீமத் கருடபுரம் ஸ்வாமி ஸ்ரீ ஸ்ரீநிவாஸ மஹா தேசிகனின்

இரண்டாவது வார்ஷிக ஆராதந மஹோத்ஸவம்.

நாளது ஸர்வஜித் ளு சித்திரைமீ 19உ (2—5—'47) வெள்ளிக்கிழமை ஆரம்பித்து, வேத பாராயணம் திவ்ய ப்ரபந்த ஸேவை முதலியவைகளுடன் 5-நாள் மஹோத்ஸவமும், 5-வது நாளாகிய செவ்வாய்க்கிழமை (க்ருஷ்ண த்விதீயை) 23-தேதியன்று (6—5—47) சாற்றுமுறை ஸம்பாவனை ஸ்ரீ பாததீர்த்த விநியோகாதிகளுடன் ஷை ஸம்வத்ஸராராதநம் ஸ்ரீமத் ஸ்வாமியின் பூர்வாச்ரமத் திருமாளிகையில் ஸ்ரீ. மதுராந்தகம் தேரடித் தெருவில் ஸ்ரீ. உ. வே, சின்னஸ்வாமி கருடபுரம், தி. ஈ. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியை முன்னிட்டுக்கொண்டு விசேஷமாக நடந்தேறியது.

தி. ஈ. வரததேசிகாசாரியர்,
தி. ஈ. திருமலாசாரியர்,
(ஸ்ரீமத் ஸ்வாமி குமாரர்கள்)

𑌶𑍍𑌰𑍀:

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹 𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃

𑌯𑍋𑌨𑍍𑌤𑌃 𑌪𑍍𑌰𑌵𑌿𑌶𑍍𑌯 𑌮𑌮 𑌵𑌾𑌚𑌮𑌿𑌮𑌾𑌂 𑌪𑍍𑌰𑌸𑍁𑌪𑍍𑌤𑌾𑌂
𑌸𑌂𑌜𑍀𑌵𑌯𑌤𑍍𑌯𑌖𑌿𑌲𑌶𑌕𑍍𑌤𑌿𑌧𑌰𑌃 𑌸𑍍𑌵𑌧𑌾𑌮𑍍𑌨𑌾 ।
𑌅𑌨𑍍𑌯𑌾𑌂𑌶𑍍𑌚 𑌹𑌸𑍍𑌤𑌚𑌰𑌣𑌶𑍍𑌰𑌵𑌣𑌤𑍍𑌵𑌗𑌾𑌦𑍀𑌨𑍍
𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌨𑍍𑌨𑌮𑍋 𑌭𑌗𑌵𑌤𑍇 𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌯 𑌤𑍁𑌭𑍍𑌯𑌮𑍍 ॥

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

திருவெவ்வுளூர் வ்யாஜ்யத்தின் ஜயம்

திருவெவ்வுளூர் வாஸிகளுட் சிலர், ஸ்ரீ வீரராகவன் ஸந்நிதியின் பரிபாலநவிஷயமாக அத்ருப்தியை அடைந்தவர்களாய், அந்த ஸந்நிதிக்குத் தர்மகர்த்தாவாக எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ அழகியசிங்கர்மீது ராஜாங்கத்து ந்யாய ஸ்தலத்தில் ஒரு வ்யாஜ்யத்தைச் செய்திருந்தார்கள். அவர்களுடைய முக்யமான ஆக்ஷேபம் என்னவென்றால்:— ஸ்ரீ அழகியசிங்கர் ஸ்ரீ வீரராகவன் ஸந்நிதியின் தர்மகர்த்தாவாக இருப்பதுடன், ஸ்ரீ அஹோபில மடத்தின் ஆஸ்தாநாதிபதியாகவும் இருக்கிறபடியால், அநேக விஷயங்களில் ஸ்ரீ வீரராகவன் ஸந்நிதிக்குச் சேரவேண்டிய த்ரவ்யங்களை ஸ்ரீ மடத்துக்காக உபயோகப்படுத்திவிடுகிறாரென்பதுதான். இப்படி உபயோகப்படுத்துவது ஸ்ரீ வீரராகவன் ஸந்நிதியின் பரிபாலந க்ரமத்திற்கு விருத்தமென்பதும், இந்த க்ரம பங்கத்தை அநேகம் தடவை பலமுகமாக எடுத்துக் காட்டியும் ஸ்ரீ அழகியசிங்கர் அது விஷயமாக எவ்வித சீர்திருத்தத்தைச் செய்யாததால், ஸ்ரீ அழகியசிங்கரை ஸ்ரீ வீரராகவன் ஸந்நிதியின் தர்மகர்த்ருத்வவத்திலிருந்து விலக்கிவிடவேண்டுமென்பதும் இந்த வ்யாஜ்யம் செய்தவர்களின் கோரிக்கை. நிற்க, ஸ்ரீ வீரராகவன் ஸந்நிதி விஷயமான கணக்குகளும் சரியானபடி வைத்துக்கொள்ளப்படவில்லை என்பதும் அவர்களுடைய ஆக்ஷேபம். இந்த வ்யாஜ்யம் செங்கல்பட்டு ஜில்லா ந்யாய ஸ்தலத்தில் இரண்டு வர்ஷ காலமாக விசாரிக்கப்பட்டு வந்தது. சென்ற வாரத்தில் அந்த ந்யாயாதிபதி விசாரத்தை முடிவுசெய்து, வாதிகளின் கோரிக்கைகள் அங்கீகரிக்கத்தக்கவையல்ல வென்று அவர்களுடைய வ்யாஜ்யத்தைத் தள்ளிவிட்டாரென்று நாம் அறிகிறோம். ஸ்ரீமான் ஸர் அல்லாடி க்ருஷ்ணஸ்வாமி ஐயர் இந்த வ்யாஜ்யத்தின் அக்ரமத்தை நிந்தித்தும், இந்த ஸந்தர்ப்பத்தில் ஸ்ரீ அழகியசிங்கருடைய மஹிமையைப் புகழ்ந்தும் பேசினது அத்யந்தம் ஸங்கதமாயும் ஆச்சர்யகரமாயும் இருந்தன.

இந்த ஸமாசாரம் நமக்கு ஸந்தோஷத்தைக் கொடுக்கின்றது. தர்ம சொத்துக்களின் பரிபாலநம் வ்யவஸ்திதமான க்ரமத்திற்கு விருத்தமாக நடத்தப்படக்கூடாதுதான். ஸ்ரீ வீரராகவன் ஸந்நிதியின் உபயோகத்தை உத்தேசித்து ஸேவார்த்திகளால் ஸமர்ப்பிக்கப்படும் த்ரவ்யங்களை அந்த ஸந்நிதியின் அபிவிருத்தியிலேயே செலவிடவேண்டியதுதான் ந்யாயத்திற்கு ஒத்தது. ப்ரக்ருதத்தில்

அந்த ந்யாயத்துக்கு விருத்தமாகக் கார்யங்கள் நடந்திருப்பதாக நமக்குத் தெரியவில்லை. அப்படி நடந்திருந்தாலும் 'அவை எப்பொழுது நடத்தப்பட்டன? யாரால் அவை நடத்தப்பட்டன?' என்பதைத் தீர்க்கமாக விசாரித்து அவைகளை இப்பொழுது ஆஸ்தானத்தை வஹித்துவரும் ஸ்ரீ அழகியசிங்கரிடம் ஒரு தடவைக்கு இரண்டு தடவையாக யதாக்ரமம் விண்ணப்பித்துக்கொண்டு அவைகளைத் திருத்திக்கொள்ளப் ப்ரயத்நப்படுவதே பாகவத தாஸ்யத்தை அவலம்பித்திருக்கும் நமக்கு உசிதமாகுமே ஒழிய, பரம ஹம்ஸப் பரிவ்ராஜகராய் பெரியதொரு ஆஸ்தானத்தை வஹித்துவரும் ஒரு மஹான்மீது குற்றம் சாட்டி, அவர்மீது ந்யாயஸ்தலத்தில் வ்யாஜ்யம் போடுவது உசிதமாகமாட்டா தென்பது நமது உறுதியான நம்பிக்கை. இக்காலத்து லௌகிக தர்மமானது, ஒருவர் நீதி தவறி ஒரு கார்யத்தைச் செய்து விட்டால், அவர் வேறு ப்ரகாரங்களில் மிகப் பெரியவராக இருந்தபோதிலும், அவர்மீது மற்றை ஸாமாந்ய ஜநங்கள் விஷயத்தில் ப்ரவர்த்திப்பதுபோல் ப்ரவ்ருத்திகளைச் செய்ய இடம் கொடுக்கலாம். பண்டைக் காலத்தில் நமது முன்னோர்களால் அநுஷ்டிக்கப்பட்டுவந்த மர்யாதையோ வென்றால்; இம்மாதிரி ப்ரவ்ருத்திக்கு இடம் கொடுக்கமாட்டாது. அந்த மர்யாதை நமது ப்ரவ்ருத்திக்கு வேறொரு விதமாகவே நியமிக்கும். அந்தந்த வ்யக்திகளுக்கும் நமக்கு முள்ள ஸம்பந்தம், அவர்களுடைய வயஸ், வேஷம், வ்ருத்தி முதலியவைகள் இவைகளைப் பார்த்து அததற்குத் தகுந்தபடி நமது வ்யாபாரங்களை மாற்றிக்கொள்ளவேண்டு மென்பது அந்த மர்யாதையின் கட்டளை. லோகத்தில் இதைக் காணலாம். ஒரு சிறுவன் ஒரு ஸத்க்ருத்யத்தைச் செய்தால் அதை நாம் ஆதரிப்பது கேவலம் ஸபாஜந மாத்ரத்தாலேயே; அந்தக் கார்யத்தையே பெரியவ ரொருவர் செய்தால், அவரிடம் தத்ப்ரயுக்தமான ஸந்தோஷத்தை நிவேதநம் செய்வது கேவலம் நல்வார்த்தையால் மாத்ர மன்று; ஆனால் ப்ரணாமாதி புரஸ்ஸரமான உபசாரோக்திகளாலு மன்றோ? அம்மாதிரியே அஸாதுவான க்ருத்யங்களிலும் நமது நடவடிக்கை மாறியே நிற்கும். ஸ்ரீ அழகியசிங்கர் உத்தமமான ஆச்ரமத்தில் எழுந்தருளியிருப்பவர்; ஜகதாசார்யத்திற்குத் துல்யமான ஆசார்யகத்தை வஹிப்பவர்; ஜ்ஞாநத்தாலும் அநுஷ்டாநத்தாலும் மிகச் சிறந்தவர்; புத்திபூர்வகமாக ஒரு அகார்யத்திலும் ப்ரவர்த்தியாதவர். அவர் விஷயத்தில் ராஜாங்கத்தாரிடம் குறை கூறுவதையும், அவரை அந்த ஸ்தாநத்திலிருந்து நிவர்த்திக்கவேணு மென்று கோருவதையும் தார்மிகர்களுடைய கார்யமென்று நாம் ஆதரிக்கமாட்டோம். ஆகையால் இந்த வ்யாஜ்யத்தை ராஜாங்கத்தார் நிராகரித்தது நமக்கு ஸந்தோஷத்தை விளைவிக்கின்றது.

* * * * *

சித்திரை மாஸத்து ஸஞ்சிகையில், நாம் நமது பாடசாலையின் வார்ஷிக மஹோத்ஸவ காலத்தில் அக்ராஸநம் வஹித்த ஸ்ரீ உப. சடகோபாசார்ய ஸ்வாமியாற் செய்யப்பட்ட உபதேசத்தின் பெருமையைப் பற்றி ஸ்வல்பமாக ப்ரஸ்தாவித்து, பச்சாத் அதைப்பற்றி விஸ்தாரமாக விசாரிப்பதாய் விண்ணப்பம் செய்துகொண் டிருந்தோம். அந்த விசாரத்தைச் சென்ற வைகாசி ஸஞ்சிகையில் செய்வதற்கு அவகாசம் ஏற்படாமற் போய்

விட்டது. இப்பொழுது அவஸரம் ப்ராப்தமாக இருக்கிறபடியால் அதைச் செய்ய யத்நிக்கிறோம்.

வேதாத்யயநத்தின் ஆவச்யகதை

ஸ்ரீ ஶடகோபாசார்யரால் பல சிறந்த உபதேசங்கள் செய்யப்பட்டன. அவைகளுள் ஒன்று முக்யமானதாக அடியேனுக்குத் தோன்றிற்று. அது என்னவென்றால்: வேதாத்யயநத்தைச் சில வித்யார்த்திகளுக்கு மாத்ரமென்று பிரித்துவைக்காமல், எல்லாவித்யார்த்திகளுக்கும் அவச்யம் போதிக்கவேண்டுமென்பதுதான். ப்ராஹ்மணனுக்கு அத்யவச்யமான படிப்பு வேதாத்யயநமென்றும், அது இல்லாத ப்ராஹ்மணனை 'வ்ராத்யன்' என்று ஶாஸ்த்ரம் கூறுகின்றது என்றும், அதன் அர்த்த ஜ்ஞாநத்தைப் பெறாவிட்டாலும், எவன் அதைக் கேவலம் அத்யயநம் மாத்ரம் செய்கிறானோ அவனுக்கும் அது பலவத்தாகிறதென்றும், இப்பொழுது ப்ராஹ்மணர்களுக்குத் தீநதஶை ஏற்பட்டிருப்பதற்கு முக்ய காரணம் அவர்கள் அதன் அத்யயநத்தை அநாதரித்து விட்டதே என்றும், இவ்வாறு அதன் மாஹாத்ம்யத்தைப் புகழ்ந்து பேசி, நாம் நமது சிறுவர்களுக்குக் கேவலம் ஶாஸ்த்ர ஜ்ஞாநத்திற்கு வேண்டிய ஸௌகர்யங்களை மாத்ரம் செய்துகொடுத்து, அவர்களை வேதம் கற்றுப் போகாமல் விட்டுவிடுவது பெரியதொரு தவறுதலென்று வற்புறுத்தினர். இந்த வற்புறுத்தலில்நாமும் சேர்கிறோம். ப்ராஹ்மண்யம் என்பது வேதாத்யயநத்தைச்செல்வதாலேயே ஸித்திக்கின்றது. அது ப்ராஹ்மணர்களுக்கு முக்யமான தபஸ். அதனால்தான் முற்காலத்து ப்ராஹ்மணர்கள் அந்யாத்ருஶமான ஶக்தியை உடையவர்களாக இருந்தார்கள். நிற்க, நமது ஆத்மவித்யைக்கு வேதமே மூலபூதமானது. "தாං ஹிவுஶாணஃ ஃவஜஜ ஃஈ தீநியெடயெஃ" [அதீந்த்ரியமான ஆத்ம விஷயத்தில் அதுதான் ப்ரமாணமென்று அதன் மஹிமையை அறிந்தவர்கள் அநுக்ரஹித்திருக்கிறார்கள்.] இவ்வளவு ப்ரதாநமான இந்த வித்யையை அநாதரித்துக் கேவலம் ஸாமாந்ய ஶாஸ்த்ர ஜ்ஞாநத்தை மாத்ரம் ஆதரித்துப் போவது, நமது ஸமூஹத்தின் ச்ரேயஸ்ஸைத் தேடும் மஹான்களுக்கு இஷ்ட ஸித்தியைக் கொடுக்கமாட்டாது என்பது நிச்சயம். இந்த ஸ்திதியை நன்கு உணர்ந்திருக்கும் மஹான்கள் தாங்கள் நடத்தும் பாடசாலைகளில் இந்தச் சீர்திருத்தத்தை உடனே செய்ய வேண்டியது அத்யவச்யமே.

ஆனால், அம்மாதிரி வேதாப்யாஸத்தைச் செய்வதற்கு, ஶாஸ்த்ராப்யாஸத்தில் ப்ரவர்த்தித்திருக்கும் வித்யார்த்திகளுக்கு அவகாஶமில்லையே என்று ஒரு கேள்வி பிறக்கலாம். 'பாஷையில் வ்யுத்பத்தியையும் ஶாஸ்த்ரத்தில் உசிதமான ஜ்ஞாநத்தையும் ஸம்பாதித்துக் கொள்வதற்கு, இதம்பரமாக ப்ரவர்த்திப்பவர்களுக்கே அதம பக்ஷம் பத்து ஸம்வத்ஸரம் ஆகின்றதே. இதனுடன் வேதாப்யாஸத்தையும் சேர்த்தால் ஶாஸ்த்ராப்யாஸம் விக்நிதமாகுமன்றோ? ஏழு எட்டு வயஸ்ஸில்பாடசாலையில் சேர்ந்தால், 22-வது 23-வதுவயஸ்ஸில்தான் குருகுலத்திலிருந்து திரும்பலாம். அது காலாத்யயமாக மாட்டாதா?' என்று கேட்கலாம். இதற்கு ப்ரத்யுத்தரம்:—புத்திஶாலிகளின் விஷயத்தில் இந்த வித்யைகளை அப்யஸிப்பதற்குப் பதினைந்து வர்ஷ காலம் அநபேக்ஷிதமே. ச்வேதகேது என்னும

வித்யார்த்தி பன்னிரண்டாவது வயஸ்ஸில் குரு குலத்தைப் போய்ச் சேர்ந்து, அவ்விடத்தில் பன்னிரண்டு வர்ஷம் வஸித்து, ஸாங்கமாக வேதங்களை அத்யயநம் செய்து, இருபத்து நாலாவது வயஸ்ஸில் பித்ரு க்ருஹத்திற்கு திரும்பி வந்ததாக உபநிஷத் சொல்கின்றது.

“𑌸 𑌹 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑌵𑌰𑍍𑌷 𑌉𑌪𑍇𑌤𑍍𑌯 𑌚𑌤𑍁𑌰𑍍𑌵𑌿𑌂𑌶𑌤𑌿𑌵𑌰𑍍𑌷𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍍𑌵𑍇𑌦𑌾
𑌨𑌧𑍀𑌤𑍍𑌯 𑌏𑌯𑌾𑌯”

என்பது உபநிஷத் வாக்யம். ஸாமாந்ய வித்யார்த்திகள் விஷயத்தில் பதினைந்து வர்ஷங்களானால், அதனால் பெரியதொரு ப்ரத்யவாயமும் இல்லை. ஆகையால் காலம் அதீதமாகிவிடு மென்னும் ஆக்ஷேபம் துர்ப்பலமே. அவச்யம் செய்ய வேண்டிய கார்யங்களில் கால விளம்பத்தைப் பார்க்கலாமோ? அடியேனுடைய வாதமோ, ‘ஶாஸ்த்ராப்யாஸமும் ஸாங்க வேதாத்யயநமும்மாத்ரம் அபர்யாப்தம்; த்ரவ்யார்ஜநத்திற்கு உபயுக்தமானலௌகிக கலைகளையும் அந்தந்தவித்யார்த்திகளின் நிலைமைக்குத் தக்கவாறு கற்பிக்கவேண்டும்’ என்பதே. அது அவ்விதம் இருக்கிறபடியால், இந்தப் பதினைந்துக்கு மேற்கொண்டு ஐந்து வர்ஷங்கள் கூட ஆனாலும் ஒருவித கெடுதலும் ஸம்பவிக்கமாட்டாதென்றே நாம் சொல்வோம். குரு குலத்திலிருந்து திரும்பிவரும் காலத்தில் வித்யார்த்திகள் அக்ஷராஸ்யர்களாகஇருப்பதுமாத்ரமின்றிக்கே குடும்ப போஷணத்திற்கு வேண்டிய த்ரவ்ய ஸம்பாதநத்திற்கு ஸமர்த்தர்களாகவும் இருத்தல் வேண்டு மென்பதே நம்முடைய கக்ஷி. நிற்க, எல்லா வித்யார்த்திகளும் ஶாஸ்த்ராப்யாஸத்திற்கு அர்ஹர்களாக இருக்கமாட்டார்கள். அவர்கள் விஷயத்தில் பாஷா வ்யுத்பத்தியுடன் வேதாத்யயநத்தைச்செய்வித்து, ஒரு லௌகிக கலையையும் உணர்த்தி, அவர்களைப் பத்து அல்லது பன்னிரண்டு வர்ஷங்களில் குரு குலத்தைவிட்டு திருப்பிவிடலா மென்பது நமது நம்பிக்கை. இம்மாதிரி ஒரு சீர்திருத்தத்தை இப்பொழுது பாடசாலையின் நிர்வாஹத்தை வஹிக்கும் மஹாங்களெல்லாரும் தீர்க்கமாக ஆலோசித்து, இந்த ஆலோசனை அங்கீகாரார்ஹ மென்று தோன்றினால், அதை ஏற்றுக்கொள்ள வேணுமென்று ப்ரார்த்திக்கிறோம்.

“𑌯𑌦𑍍𑌯𑌪𑍍𑌯𑍇𑌷𑌾 [illegible] ।
𑌸 𑌨𑍍𑌯𑌾 [illegible] 𑌜𑍍𑌞𑌾 𑌹𑌿 [illegible] 𑌦𑌯𑌾 ॥”

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

காமாஸிகாஷ்டகம்.

ஸ்ரீமான் வேங்கடநாதார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேதாந்தாசார்யவர்யோ மே ஸந்நிதத்தாம் ஸதா ஹ்ருதி ॥

ஸ்ருதீநாமுத்தரம் பாகம் வேகவத்யாஶ்ச தக்ஷிணம் ।
காமாததிவஸந் ஜீயாத் கஶ்சிதத்புதகேஸரீ ॥ 1.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

காமாஸிகாஷ்டகம்.

வஸீம்ஶாந்வய ஸம்பூதா வாஸந்தேவஸுதாம் ஸுதே ।
தநோதிமுரவிஶம் வ்யாவ்யாம் காமாஸிகாஷ்டகஸ்துதே: ॥

[ஸ்ரீ தேஶிகனால் அநுக்ரஹிக்கப்பட்டுள்ள ‘ ஸ்ரீ காமாஸிகாஷ்டக ஸ்தோத்ரம்' என்னும் பகவத் ஸ்தோத்ரத்திற்குப் பதவுரை பொழிப்புரை முதலியவை களௌளிய தமிழில் எழுதி, அவற்றை ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியை வாயிலாக வெளியிட வேண்டுமென்று சில தேஶிக பக்தர்கள் நியமித்ததன் பேரில், அந்த நியமனத்தை யதாஶக்தி நிறைவேற்றவேண்டு மென்றெண்ணி அடியேன் இந்த வ்யாபாரத்தில் ப்ரவர்த்திக்கத் துணிகின்றேன். ஸஹ்ருத்துக்களுடைய நியமநத்தை மேற்கொண்டு அடியேன் செய்யும் இந்த ப்ரவ்ருத்தி நிர்விக்நமாய் நடைபெறுமாறு பெரியோர்கள் க்ருபையுடன் அநுக்ரஹித்தருள வேண்டும்.]

1. [பதவுரை] ஸ்ருதீநாம்- வேதங்களுடைய, உத்தரம் பாகம்-மேல் பாகத்திலும் [வடக்கிலும்], வேகவத்யா:-வேகவதியினுடைய, தக்ஷிணம் பாகம்-தென் பக்கத்திலும், காமாத் - கேவலம் தனது ஸங்கல்பத்தாலேயே [மற்றவர்களுடைய ப்ரார்த்தனையைத் தலைக்கட்டுவதென்ப தின்றிக்கே] அதிவஸந்-வஸித்துக்கொண்டிருக்கும், கஶ்சித் - ஒரு, அத்புத கேஸரீ - ஜகத் விலக்ஷணமான ஸிம்ஹமானது, ஜீயாத்-ஜயஶீலமாக இருக்கட்டும்.

ஸ்ருதீநாம்—வேதங்களில் இந்த ந்ருஸிம்ஹ மூர்த்தி ப்ரஸ்தாவிக்கப்படும் இடமுண்டு. [“ம்ருகோ ந பீம: குசரோ கிரிஷ்டா:” ம்ருக: - ஸிம்ஹமாயிருக்கச் செய்தேயும், ந பீம:-(அநுகூலர்க்குப்) பயங்கரமான தன்று: கிரிஷ்டா: - மலையில் யஜ்ஞத்தைக் காப்பாற்றுவதற்காக எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ வரதனே , குசர: - பூமியில் வேகவதிக் கரையில் வந்து எழுந்தருளியிருக்கிறான்.] இப்படிப்பட்ட சில ச்ருதிகள் ஸ்ரீ ந்ருஸிம்ஹாவதாரத்தைப் பற்றிப் பேசியிருக்கின்றன.

கஶ்சித்- இது ஒரு வைலக்ஷண்யத்தைக் குறிக்கிறது. ஜகத்தில், ஸிம்ஹங்களும் மநுஷ்யர்களும், முழுவதும் ஸிம்ஹ ரூபமாகவோ முழுவதும் மநுஷ்ய ரூபமாகவோ காணப்படுவதுண்டு; இந்த ஸிம்ஹமோ, தலைமாத்ரம் ஸிம்ஹமாகவும் மற்ற அவயவங்க

ளெல்லாம் மநுஷ்யர்களின் அவயவங்களாகவும், இவ்வாறு விலக்ஷணமாகக் காணப்படு கிறது. இந்த அர்த்தத்தையே 'ஸுஜூ—த கெஸரீ' என்னு மிடத்திலுள்ள 'ஸுஜூ—த' ஶப்தமும் சொல்லுகிறது.

நிற்க: ஒரு பக்கத்தில் பல ஸ்த்ரீகளேயும், மற்ருெரு பக்கத்தில் மற்ருெரு ஸ்த்ரீ யையும் ஆலிங்கநம் செய்துகொண்டு ரமிக்கும் ஸிம்ஹமும் ஜகத்தில் உண்டோ? இந்தக் காரணத்தாலும் அந்த ஸிம்ஹம் விலக்ஷணமானது.

அன்றிக்கே: ஹிரண்யனை ஸம்ஹாரம் செய்வதற்காக அதி பயங்கரமான ரூபத்துடன் ஆவிர்ப்பவித் திருக்கையிலும், ஆழ்வார் முதலியவர்களேப் பல விதமாகப் பாடி நெஞ்சுருகப் பண்ணின ரூபமன்ருே இது? இதனுலும் இது அத்புதமானது.

இது, வேகவதீ நதீ தீரத்தில் அர்ச்சாரூபியாகத் திருவவதரித்துக் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ந்ருஸிம்ஹ மூர்த்தியை ப்ரதிபாத்ய விஷயமாகக் கொண்டது; இது, ஒன்பது ச்லோகங்கள் அடங்கிய ஒரு சிறிய ஸ்தோத்ரம். இதற்கு விஷயமாயிருக்கும் ஸ்ரீ ந்ருஸிம்ஹனை 'காஊஸிகாஹரி:' என்றும், 'காஊஸிகாகெஸரீ' என்றும், 'காஊஸிகா நரஹரி:' என்றும், இவ்வாறு 'காஊஸிகா' என்னும் பதத்தோடு கூடிய ந்ருஸிம்ஹ சப்த வாச்யமாக இந்த ஸ்தோத் ரத்தில் ஸ்ரீ ஸ்வாமி வ்யவஹரிக்கிருர். இந்த 'காஊஸிகா' என்னும் பதத்தின் பொருளை விசாரிக்குங்கால், அதை இரண்டு மூன்று ப்ரகாரங்களாகப் பெரியோர்கள் விவரித் திருக்கிருர்களென்று அறிகிருேம்.

முதலாவது: 'காமம்' என்பதற்கு, 'இச்சை' 'ஸங்கல்பம்' என்னும் பொருள் உண்டு. 'ஆஸிகா' என்பது, பர்யாயேண எடுத்துக் கொள்ளப்படும் ஆஸநத்தைக் குறிக் கும். எனவே, இரண்டு சொற்களும் சேர்ந்த சொற்ருெடர்க்கு, 'தனது ஸங்கல்பப்படி மாறி மாறி இரண்டு மூர்த்திகளேத் தரிக்கிறவன்' என்னும் பொருள் கிடைக்கின்றது. இதனெல், 'ச்ருதி சிரஸ்ஸில் ப்ரகாசித்துக்கொண்டிருக்கும் பரப்ரஹ்மமே இவ்விடத்தில் தனது இச்சா மாத்ரத்தால் வேகவதி நதிக் கரையில் அர்ச்சாரூபியாக எழுந்தருளியிருக்கிருன்' என்று சொல்லப்பட்டதாகிறது. 'வேகவதியின் ஸங்கத்தால் ஸ்ரீ வைகுண்டத்திலுள்ள ஆஸக்தி யும் குறைந்து விட்டதோ?' என்னும் சங்கை இவ்விடத்தில் த்வநிக்கின்றதென்றும் சொல்லலாம். இதை அடியொற்றியே ஸ்ரீ ஸ்வாமியே மேல் மூன்ருவது ச்லோகத்தில் "வெஹொவகுணஹஜாதிஉ—தவெ—ண கு—பஹு—உசிழ" [வேகவதியின் சேர்க்கை நேர்ந்தவுடன் ஸ்ரீ வைகுண்டத்தில் பஹு காலமாகத் தனக்கு இயற்கையா யிருந்த பஹுமதியும் போய்விட்டதோ!] என்று அருளிச்செய்திருக்கிருர்.

இரண்டாவது: 'காமம்' என்னும் பதத்துக்கு 'மந்மத கார்யம்' என்னும் பொரு ளும் உண்டு

"ஶ்ரு—தீநாஉ—தூரம் ஹாஐம் வெஹவதூாஸு உக்ஷிணழ"

என்றிருக்கும் பத ஸ்வாரஸ்யத்தைப் பார்க்கும்போது, 'ஒரு காமுகன் போல் இவனும் நடக்கிருன்; ஒரு பக்கத்தில் ச்ருதிகளாகிற பல ஸ்த்ரீகளேயும், மற்ருெரு பக்கத்தில் வேக வதீ என்னும் ஒரு ஸ்த்ரீயையும் பர்யாயேண அநுபவித்து வருகிருன்' என்னும் அர்த் தமும் த்வநிக்கின்றது. 'ச்ருதிகள்' என்னும் பன்மையையும், 'வேகவதீ' என்னும் ஒருமையையும் பார்க்கும்போது, மற்றை அநேக ஸ்த்ரீகளிடம் உள்ள வ்யாமோஹத்தைக் காட்டிலும் இந்த ஒரு ஸ்த்ரீயாகிற வேகவதியினிடமுள்ள வ்யாமோஹம் பீன்மடங்கு அதி கம் என்பது த்வநிக்கின்றதென்று சொல்லக்கூடும். இந்தப் பொருளும் ஸ்ரீ தேசிக னுடைய திருவுள்ளத்தில் நடையாடுகின்றதென்பது, மேல் ஆருவது ச்லோகத்தில் 'காமா ஸிகை' என்னுமிடத்தில் 'மதநாஸிகை' என்று ப்ரயோகிக்கப்பட்டுள்ள பதத்தால் விளங்கும்.

தபநேந்துவஹ்நிநயந: தாபாநபாகரோது ந: ।
தாபநீயரஹஸ்யாநாம் ஸார: காமாஸிகாஹரி: ॥ 2.

'பக்தி ரஸ ப்ரதாநமான ஸ்தோத்ரங்களில் இம்மாதிரி ச்ருங்கார ரஸத்தை ஸூசிப்பிக்கும் பத ப்ரயோகங்களைச் செய்வது விரஸ மன்றோ?' என்று ஒரு ஶங்கை ஜநிக்கலாம். இம்மாதிரி ப்ரயோகத்தை ஆழ்வார் அருளிச் செயல்களிலும் ஸ்ரீ தேசிகனுடைய மற்றைத் திவ்ய ஸூக்திகளிலும் காணலாம். உதாஹரணமாக: ஸ்ரீ தேவ நாயக பஞ்சாஶத்தில் ஸ்ரீ ஸ்வாமி ப்ரயோகித்திருக்கும் 'தீ:' 'த்ருதி:' 'தநீஷா' இத்யாதி ஸ்த்ரீலிங்க ஶப்தங்களால் நாயிகா நிர்த்தேஶம் வ்யக்தமாகத் தெரிகின்ற தன்றோ? "கண்டாஶ்லேஷி மங்களஸூத்ரம் வஹதி ததே தீ:" [கண்டாச்லேஷத்தில் உத்ஸுகையான நாயிகை தனது ஆத்மாவையே நாயகனுடைய கண்டத்தில் மங்கள ஸூத்ரம் போல் கட்ட நினைத்தால், உடனே அவள், நாயகனாலே த்ருடமாக ஆலிங்கநம் பண்ணப்படுகிறாள்] என்னும் த்வநியின் ஸ்வாரஸ்யம் ரஸிக்கத்தக்கது. "சிந்தா ந்ருஹரே தவ மஹிமாநுபவேந க்ருதார்த்தா" [என்னுடைய சிந்தை உன்னுடைய மாஹாத்ம்யாநுபவத்தை அடைந்து க்ருதார்த்ததையைப் பெறுகின்றது] என்பது மற்றொரு ரஸோக்தி. இவ்வாறு ச்ருங்கார வ்ருத்தியான பரிணதி இவ்விடத்திலும் த்வநிக்கின்ற தென்று சொல்வதில் எவ்வித ஆக்ஷேபமும் இருக்கமாட்டாது. இந்தப் பாவம், உக்மஸ்தகமான ஆநந்த ரூபம்; ஒரு பொழுதும் இது எவ்வித வைரஸ்யத்தையும் அடையமாட்டாது. இம் மாதிரியான இடங்களில் ப்ரஸ்தாவிக்கப்படும் மிதுநம் ஆத்ம மிதுநம். இதனால் உண்டாகும் ரதியும் ஆத்ம ரதி; ஆத்மாவுக்கு ஆத்மாவிடம் ரதி பாவம் அத்யந்தம் உசிதமே.

மூன்றாவது:—'காம' என்பது 'ஸ்வேச்சை மாத்ரத்தால்; மற்றவர்களால் ப்ரார்த்திக்கப்படாதவராய்' என்பதையும் சொல்லும். சதுர்முகன் நம்பேரருளாளனைத் திருவத்திமா மலையிலே ஶாச்வதமாக எழுந்தருளியிருக்கவேணு மென்று ப்ரார்த்திக்க, அவன் அந்த ப்ரார்த்தனைக்கு இணங்கி அருள்செய்து பாவுகர்கள் ஈடுபடும்படி நிற்கின்றான்; அது போலன்றிக்கே, ஸ்ரீ ந்ருஸிம்ஹன் கேவல் ஸ்வ ஸங்கல்ப மாத்ரத்தாலே (காமாத்) திருவவதரித்திருப்பதை அநுஸந்தித்து, 'காமாஸிகாஹரி:' என்று சொல்லப்படுகிறான். 'கேவலம் ஸங்கல்பத்தால் ஏற்பட்ட இருப்பு எந்த க்ஷேத்ரத்திலோ, அப்படிப்பட்ட காமாஸிகையையுடைய க்ஷேத்ரத்தில் எழுந்தருளியிருக்கும் மூர்த்தி' என்பது ஶப்தார்த்தம். "காமாஸிகா க்ஷேத்ரவாஸீ ஹரி: = காமாஸிகாஹரி:".

2. [பதவுரை] தபந - ஸூர்யன், இந்து - சந்த்ரன், வஹ்நி - நெருப்பு, நயந - இவைகளைக் கண்களாக உடையவனும், தாபநீய ரஹஸ்யாநாம் - ஸ்ரீ ந்ருஸிம்ஹ தாபநீய உபநிஷத்துக்களுடைய, ஸார: - முக்ய ப்ரதிபாத்யனுமிருக்கும், காமாஸிகாஹரி: - காமாஸிகா க்ஷேத்ரத்தில் வஸிக்கிற பகவான், ந: - நம்முடைய, தாபாந் - தாபத்ரயங்கள் எல்லாவற்றையும், அபாகரோது - போக்கடிக்கட்டும்.

'தபநேந்துவஹ்நிநயந:' - என்பதால், ஸ்ரீ ந்ருஸிம்ஹ மூர்த்தி மூன்று கண்களை உடையவனாக ஸேவை ஸாதிப்பதாக ஏற்படுகிறது. இந்த ஸ்தோத்ரத்துக்கு மூலமாக இருக்கும் தாபநீய உபநிஷத்தில் ப்ரதிபாதிக்கப்படும் ஸ்ரீ ந்ருஸிம்ஹ தேவதையானது மூன்று கண்களை யுடையதென்று வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

விரூபாக்ஷ:- விரூபமான கண்களையுடையவன். ஸ்ரீ ந்ருஸிம்ஹாஷ்டோத்தரத்தில், 'வஹ்நிநேத்ர:' 'த்ரிநேத்ர:' 'ஸோமஶிவ:' இத்யாதியான

விஶேஷணங்களும் காணப்படுகின்றன. ஸ்ரீ ஶங்கராசார்யரால் செய்யப்பட்ட கருணா ரஸ ஸ்தோத்ரத்திலும் ‘வீரபத்ரஜித்’ [வீரபத்ரனை ஜயித்தவன்] என்னும் விஶேஷணமும் காணப்படுகிறது. இவைகளெல்லாம் ப்ரமாண க்ரந்தங்களானபடியால், நமது ஆழ்வாராசார்யர்களும் இவைகளை அங்கீகரித்து வருகிறார்கள்.

ஸ்ரீ ந்ருஸிம்ஹதாபநீய உபநிஷத் என்பது, நமக்கு அத்யந்தம் உபாதேயமானது அதில் சொல்லப்பட்டிருக்கும் ஸ்ரீ ந்ருஸிம்ஹ அநுஷ்டுப் என்பது பெரியதொரு மந்த்ரம் ஸாக்ஷாத் பரமசிவனே இந்த அநுஷ்டுப்புக்கு ‘மந்த்ரராஜ பத ஸ்தோத்ரம்’ என்று பெயர் தந்து, அந்த அநுஷ்டுப்பில் காணப்படும் ஒன்பது பதங்களுடைய பொருளை ஒன்பது ச்லோகங்களால் விவரித்திருக்கிறான். இதற்கு ஸ்ரீ மந்த்ர ராஜபத ஸ்தோத்ரம் என்று பெயர். இந்த அநுஷ்டுப்பையும் இந்தப் பத ஸ்தோத்ரத்தையும் நமது ஆசார்யர்கள் ப்ரதிதிநம் அநுஸந்தித்து வருவதை நாம் அறிவோம். ஸ்ரீ தேசிகனும் இந்த ஸ்தோத்ரத்திலும், இன்னும் மற்றைச் சில விடங்களிலும் இந்த அநுஷ்டுப்பையும் இந்தப் பத ஸ்தோத்ரத்தை ப்ரதாந ப்ரமாணமாகக் கொண்டாடியிருக்கிறார். இவைகளில் காணப்படும், பரமசிவனை ஸூசிப்பிக்கும் சிந்ஹங்களுக்கு இவர்கள் என்ன ஸமாதாநம் சொல்லுகிறார்கள் என்பதை நாம் கவனிக்கவேண்டும்.

ஸ்ரீ ந்ருஸிம்ஹாவதாரத்தைப் பரமசிவனுடைய அவதாரமென்று சொல்வதற்கில்லை. ஏனென்றால்: ஸ்ரீ ந்ருஸிம்ஹாவதாரத்தைப்பற்றி ப்ரஸ்தாவிக்குமிடங்களிலெல்லாம் அந்த அவதாரத்தை மஹாவிஷ்ணுவின் அவதாரமென்றே வ்யக்தமாகச் சொல்லியிருக்கிறார்கள். ஒருகால் இரண்டு தேவதைகளின் ஐக்யம் விவக்ஷிதமோ வென்றால் அது பஹு ப்ரமாணங்களுக்கு விருத்தம். வேறு எவ்விதமாக இந்த விரோதத்தை நமது ஆசார்யர்கள் ஸமீகரித்திருக்கிறார்களென்றால், அதை ஆராய்ச்சி செய்யுங் காலத்தில், அந்த ஸமாதாநம் இரண்டு ப்ரகாரமாகச் செய்யப்பட் டிருப்பதை நாம் பார்க்கலாம்.

முதலாவது : காஞ்சீ மாஹாத்ம்யத்தில் பின்வருமாறு ஒரு ச்லோகம் காணப்படுகிறது;-

“ നരസിംഹോ യജ്ഞസാധ്യായ ഉദ്ഭൂതഃ ശൈലഭൂസ്ഥിതേ ।
തദൈവാസീന്നവം രക്ഷണാസുരേഭ്യഃ സമാഗതഃ ॥ ”

[இதன் பொருள் :— சதுர்முகன் யஜ்ஞம் செய்ய ஆரம்பித்தபோது அந்த யஜ்ஞத்தை அஸுரர்களுடைய துராக்ரமங்களிலிருந்து ஸம்ரக்ஷிக்கும்பொருட்டு ஸ்ரீ ந்ருஸிம்ஹன் அவதரித்தான்.] அப்பொழுது பரமசிவன் யாகத்துக்கு விக்நம் செய்யவேண்டுமென்னும் உத்தேசத்துடன் சம்பரன் முதலான அஸுரர்களுடன் வந்திருப்பதைப் பார்த்து ஸ்ரீ மஹாவிஷ்ணு, இந்தப் பரமசிவனை மோஹிப்பித்து ஜயிக்கவேண்டுமென்னும் எண்ணத்துடன், தான் சிவனுடைய சிந்ஹங்களை ஏறிட்டுக்கொண்டிருந்தானாம். ஆனால் இது சதுர்முகனுடைய யஜ்ஞ காலத்தில் நடந்த அவதாரம். அந்தக் காலம் ஒரு காலம்; ஹிரண்யனுடைய வதம் வேறு காலம். இருந்தபோதிலும், இக்காலத்திலும் இன்னும் இப்படிப்பட்ட ஆஸுர ப்ரக்ருதிகள் யாராவது ஸம்பவிக்கக் கூடுமென்றெண்ணி, முன்போலவே இப்பொழுதும் சிவனுடைய அடையாளங்களுடன் திருவவதரித்திருக்கலாம் என்பது ஒரு ஸமாதாநம். மற்றுமொன்று என்னவென்றால்:— ருத்ரனும் எம்பெருமானுடைய அம்சமே யாதலால், ப்ரமாணங்களில் ருத்ரனிடம் இருப்பதாகக் கூறப்படும் முக்கண்கள் பிநாக தநுஸ் சந்த்ரகலை, இவைகளும் ஸ்ரீ ந்ருஸிம்ஹனிடத்லும் காணப்பட்டிருக்கக் கூடும். இதுதான் இரண்டாவது ஸமாதாநம். ஆச்ரிதர் பொருட்டுத் தன்னை அழிய மாறி உபகரிக்கும் ஸ்வபாவம் உள்ளவனன்றோ இவன் ?

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியாவின் '47 ஹூ ஏப்ரல் மாஸத்துச் சந்தா வரவு

			ரூ.	அ.
45	ஸ்ரீ.	S. ரங்காசார்யர், ஸிம்லா	3	0
79	,,	டி. பி. செல்லம் ஐயங்கார், விழுப்புரம்	3	0
81	,,	கே. ஆர். க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார், பழைய மாம்பலம்	3	0
124	,,	ஸி. எஸ். ஸுந்தராசார்யர், மாதுங்கா, பம்பாய்	3	0
125	,,	ஏ. பார்த்தஸாரதி, பம்பாய்	3	0
134	,,	ஏ. வி. கோபாலாசார்யர், 'கோகுலம்', திருச்சி	3	0
167	,,	பி. ஏ. ஸ்ரீநிவாஸாசார்யர், ஜி. டி., சென்னை	3	0
255	,,	ஸி. ஆர். சாரங்கபாணி ஐயங்கார், கோவில்வெண்ணி	3	0
410	,,	அப்பா. ஸ்ரீநிவாஸையங்கார், கல்யாணபுரம்	3	0
414	,,	கே. டி. ராஜகோபால ஐயங்கார், விழுப்புரம்	3	0
442	,,	கே. நரஸிம்ஹாசார்யர், குவளைவில்லி	3	0
615	,,	எம். வி. நரஸிம்ஹ ஐயங்கார், சிங்கநல்லூர்... ...	3	0
644	,,	உ. ச. ராஜம்மாள், அவளூர்	1	8
750	,,	ஏ. ரங்காசார்யர், கல்கத்தா	3	0
771	,,	கே. என். கே. ராமன், கல்யாண், ஜி. ஐ. பி.	3	0
772	,,	என். வி. ராகவன், மாதுங்கா, பம்பாய்	3	0
773	,,	எஸ். ராஜகோபாலன், காரைக்குடி	3	0
		மொத்தம் ரூ.	49	8

Regd. M. 4437.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ அஹோபில மடத்தில் அச்சிடப் பெற்ற

கீழ்க் கண்ட புஸ்தகங்கள் 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' ஆபீஸில்

விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன.

		சந்தாதாரர்களுக்கு ரூ. அ	மற்றவர்கட்கு ரூ. அ.
1.	ஸ்ரீ அதிகரண ஸாராவளி (தேவநாகர லிபி) [சிந்தாமணி, கல்பதரு வ்யாக்யாநத்துடன் காலிகோ பயிண்ட் செய்தது]	6—8	7—8
2.	உக்தி நிஷ்டாபரணம் ந்யாஸ நிஷ்டா மீமாம்ஸா ச (க்ரந்த லிபி)	0–12	1—0
3.	உக்தி நிஷ்டாபரணோத்யோதம் ,,	0—8	0–12
4.	வீக்ஷாரண்ய க்ஷேத்ர மஹாத்ம்யம் மணிப்ரவாள வ்யாக்யாநம் (க்ரந்த லிபி)	1—0	1—8
5.	ந்யாஸ நிர்ணயம் (க்ரந்த லிபி)	0—8	0–12
6.	ஸ்ரீ வீரராகவ ஸ்வாமி ஸுப்ரபாதம் (க்ரந்த லிபி)	0—3	0—4
7.	ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்த ஸங்க்ரஹம் (க்ரந்த லிபி)	2—0	3—0
8.	ஈசாவாஸ்ய, கேந, கடோபநிஷத் (நாகர லிபி, தமிழ் மொழி பெயர்ப்புடன், 160 பக்கம்)	1—0	1—8

(தபால் செலவு வேறு)

வேண்டுபவர்கள்:—

மானேஜர், ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ஆபீஸ்,

நெ. 5, ராமஸ்வாமி தெரு, தியாகராய நகர், சென்னை.

என்னும் விலாஸத்திற்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

Printed by T. A. P. Srinivasavaradachariar, at Sri Sudarsana Press, 14, Sannidhi Street, L. Conjeeveram. Edited and Published by S. Vasudevachariar, 5, Ramaswami Street, Tyagarayanagar, Madras.